பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி

## VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 17 | புதன்கிழமை (30-04-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 132

# யாழ். கோட்டையில் முகாம் அமைப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## தமிழ்க் கூட்டமைப்பு, பொது அமைப்புகள் கூட்டாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டையின் மேற்குப் புறத்தில் மீள ஒரு இராணுவ முகாம் அமைக்கும் முயற்சி யாழ். நகர மத்தியில் இருந்து இராணுவத்தை அகற்றும் நடவடிக்கை அல்ல. இது ஒரு படைநகர்த்தல் முயற்சியே என தமிழத் தேசிய கூட்டமைப்பும், பொது அமைப்புக்களும் குற்றஞ்சாட்டியுள்ளன. இவ்விடயம் தொடர்பாக அவை மேலும் தெரிவித்திருப்பதாவது:

மக்கள் நடமாட்டம் உள்ள எந்த ஒரு இடத்திலும் புதிய இராணுவ முகாம் அமைப்பதனை நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை. தற்போது முகாம் அமைக்க திட்டமிட்டுள்ள நிலப்பரப்பில் யாழ். வைத்திய சாலை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் முன்பு மார்புச் சிகிச்சை வைத்தியசாலை ஒன்றும் இந் நிலப்பரப்பில் இருந்துள்ளது. அதேவேளை தீவகத்திற்கு மக்கள் செல்லும் ஒரே பாதையை பாதிக்கும் நடவடிக்கையாகவும் இது உள்ளது.

எனவே யாழ். மக்களின் வாழ்க்கையை பாதிக்கக் கூடிய வகையில் இந்நடவடிக்கை அமைவதால் இதனை கடுமையாக எதிர்க்கப்போவதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பொது அமைப்புக்களின் ஒன்றியமும் கூட்டாக தெரிவித்துள்ளன. (ந-4)

## மிருசுவில் படுகொலை நேற்று விசாரணை

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ் விசாரணையின்போது படு கொலைசெய்யப்பட்ட ஜெயச்சந்திரனின் தந்தையார் மயிலன் நடேசு (48 வயது) சாட்சியமளித்தார்.

2000-ம் ஆண்டு டிசம்பர் 19-ம் திகதி தனது மகன் ஜெயச்சந்திரனும் மருமகன் தெய்வகுலசிங்கமும் வெளியே சென்றனர். ஆனால் அன்று அவர்கள் வீடு திரும்பவில்லை.20-ம்

(10ம் பக்கம் பார்க்க)

# திருமலை புறநகர்ப் பகுதி நேற்று படையினரால் சுற்றி வளைப்பு

(திருகோணமலை)

**திருகோணமலை புறநகர்ப் பகுதியில் உள்ள பள்ளத் தோட்டம் ஜமாலியா பகுதிகள் நேற்றுக் காலை 4மணியளவில் இலங்கை இராணுவத்தினராலும் பொலிசாராலும் திடீரென சுற்றிவளைக்கப் பட்டு வீடுவீடாக தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.**


**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு 14மாதங்கள் கடந்த நிலையில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சுற்றிவளைப்பு இதுவாகும்.**

திருகோணமலை புறநகர்ப்பகுதியான ஜமாலியாவில் கடந்த 19-ம் திகதியும் 26-ம் திகதியும் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவங்களை அடுத்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் படுகாயமடைந்ததுடன் அங்கு பதற்றமும் நிலவியது.

இதனை அடுத்து ஜமாலியா பகுதியும் பள்ளத்தோட்டப் பகுதியும் நேற்றுக் காலை இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் சுற்றிவளைக் கப்பட்டு வீடுவீடாக தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

நாவாந்துறையில் சேதமாக்கப்பட்ட வீடுகளில் ஒன்று



## நாவாந்துறையில் நேற்றிரவு பெரும் கோஷ்டி மோதல்

### வீடுகள் அடித்து நொருக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைச் சந்தியில் நேற்று இரவு இரு கோஷ்டிகளுக்கிடையில் இடம்பெற்ற பெரும் மோதலில் அப் பகுதியில் உள்ள வீடுகள் அடித்து நொருக்கப்பட்டதுடன் வீட்டு உடைமைகளும் சேதமாக்கப்பட்டன.

நேற்று நண்பகல் அளவில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

# அனுருத்தவுக்கு புலிகளால் ஆபத்து நீதிமன்றில் சட்டத்தரணி முறையீடு

## பாதுகாப்பை பலப்படுத்த நீதிபதிகள் உத்தரவு

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை விசாரணைகள் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதிகள் எரிக் பஸநாயக்க தீபளிவிஜயசுந்தர சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் எடுக்கப் பட்டபோது முதலாம் எதிரியும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தைக்கு நீதிமன்றத்தினுள் போதிய பாதுகாப்பு இல்லை என அவரது சட்டத்தரணி நீதிபதியிடம் முறைப்பாடு செய்ததுடன் புலிகளால் அவருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் அதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நீதியரசர்கள் இரு தரப்பு சட்டத்தரணிகளையும் நீதிமன்ற அறையினுள் அழைத்து ஆலோசனை நடத்தினர்.

இறுதியில் விசாரணைகளின்போது நீதிமன்றத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது. இதனடிப்படையில் புதிய

(10ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் படத்துடன் பளையில் இருந்து சென்ற நபரிடம் அல்லைப்பிட்டியில் கடும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

தலைவர் பிரபாகரனின் படத்தையும், புலிகள் அமைப்பு தொடர்பான புத்தகம் ஒன்றையும் தீவகத்தினுள் கொண்டு சென்ற பொதுமகன் ஒருவர் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து கடற்படையினரால் கடுமையாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இது சம்மந்தமாக கண்காணிப்புக் குழுவிடமோ மனித உரிமை ஆணைக்குழுவிடமோ முறையிடக்கூடாதெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

பளையில் இடம்பெற்ற ஆனையிறவு வெற்றிவிழாவில் கலந்துவிட்டு

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன் புலிகள் நேற்று சந்திப்பு

## மட்டு. வவுணதீவில் நடந்தது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை மட்டக்களப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் உள்ள சூனியப் பிரதேசமான வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி ஜோசப் பரராஜசிங்கம் உட்பட ஆறு பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்களின் சார்பில் பிரதி அமைச்சர் பஹீர்சேவுதாவுத் தலைமையிலான முஸ்லிம் பிரதிநிதிகளும் மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி மற்றும் மட்டக்களப்பு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


இச் சந்திப்பின்போது கடந்த மாதம் 27ம் திகதி இடம்பெற்ற சந்திப்

(10ம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறை - புளியங்கூடல்

# அருள்மிகு இந்தன் முத்துவிநாயகர் கோவில்

## இரதோற்சவ சிறப்புமலர் 30-04-2003



இந்தன்
முத்துவிநாயகரின்தேர் உலா
சிறப்புற வாழ்த்துகிறோம்
நாளுக்கு நாள் மாறும்
நவநாகரிக தங்க நகைகளுக்கு

**சாரங்கா நகை மாடம்**

177/4 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
157/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

இந்தன்
முத்துவிநாயகரின் அருள்
அனைவருக்கும் கிடைக்க
பிரார்த்திக்கின்றோம்
அனைத்து மின்சார
உபகரணங்களுக்கும் நாடுங்கள்

**கரசன்ஸ்**

**எலெக்ரிக்கல்ஸ்**

(4)14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

இன்று ரத உலா
வரும் இந்தன் முத்துவிநாயகரின்
அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

**சிறி வாணி**

**நகைமாடம்**

173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும்
இந்தன் முத்து விநாயகரின் அருள்
கிடைக்க பிரார்த்திக்கிறோம்
தங்க நகைகளின் அரங்கம்

**செல்வி**

**நகை அகம்.**

1/3, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

இந்தன்
முத்துவிநாயகரின் அருள் அனை
வருக்கும் கிடைக்க வேண்டுகிறோம்
சுத்தமான சுவையான ஐஸ் கிறீம்
வகைகளுக்கு

**லிங்கன்**

**கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

இன்று தேர்
வீதி உலாவரும் இந்தன்
விநாயகரின் அருள் வேண்டிநிற்கிறோம்
அழகிய கலை நயம்...
எழிலுறு தொழில் வளம்...
உயர் தரமிகு தங்க நகைகளுக்கு...

**தயா**

**நகைப்பூங்கா**

213C, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும்
இந்தன் முத்துவிநாயகரின்
அருள் வேண்டி நிற்கிறோம்
மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும் தங்க
நகைகளுக்கு.

**நியூ பிரியங்கா**

**நகைமாளிகை**

2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

இன்று தேர்
உலா வரும் அருள்மிகு இந்தன்
முத்து விநாயகரின் அருள் யாவருக்கும்
கிடைக்க வேண்டி நிற்கிறோம்.
கண்ணைக்கவரும் அழகிய
தங்க நகைகளுக்கு

**சிவசயானி**

**நகையகம்**

175/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

இந்தன்
விநாயகரின் அருள் நாட்டு
மக்கள் அனைவருக்கும் கிடைக்க
பிரார்த்திக்கின்றோம்.
* ஐஸ்கிறீம் வகைகள்
* குளிர்பான வகைகள்
* சிற்றுண்டி வகைகள்
அனைத்திற்கும்

**குலம் கிறீம்**

**ஹவுஸ்**

226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்திய அரசின் உதவியை இலங்கை மறைமுகமாக நாடுகிறது

## கோட்டை வட்டாரத்தில் முகாம் அமைக்க

## இந்தியா வழங்கியிருக்கும் உதவி குறித்து அரசியலாளர் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டதனால் ஏற்பட்டுள்ள அழுத்த நிலையில் இருந்து அரசு தன்னை விடுவித்துக்கொள்வதற்கான முன் நடவடிக்கையாகவே பாதுகாப்பு அமைச்சு யாழ்.கோட்டையை அண்டிய அரச காணியில் முகாம்அமைக்கும் முடிவை எடுத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் இந்த முடிவு குறித்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ள அரசியல் அவதானிகள்,

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்துள்ளதுடன் யாழ் நகரின் மத்தியில் உள்ள படை முகாமை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கான பதிலை ஓரிரு தினங்களில் அறிவிப்பதாகவும் யாழ். மக்களுக்கு உறுதி வழங்கியிருந்தார்.

புதிய இடத்தில் முகாம் அமைப்பதற்கான உத்தரவை பிறப்பித்து அரசின் உறுதி மொழியை பாதுகாப்பு அமைச்சு காப்பாற்றிவிட்டது.

யாழ்.நகர மத்தியில் தனியாருக்குச் சொந்தமான ஞானம்ஸ் ஹோட்டல் ,சுபாஸ்ஹோட்டல் மற்றும்80 தனியார் வீடுகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி யாழ்.கோட்டையிலும் அதனை அண்டிய அரச காணிகளிலும் முகாம் அமைக்க பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்துள்ளது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உயர் பாதுகாப்பு மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம்,முகாம் அமைப்பதற்கான நிர்மாணப் பணிகளுக்கு தேவையான கட்டடப்பொருட்களை,இந்தியா வழங்கிய கடன் உதவி திட்டத்தை பயன்படுத்தி பெற்றுக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்டடம் அமைப்பதற்கு தேவையான ஒரு தொகுதிப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதாகவும் நிர்மாணப் பணிகள் மிகக்குறிகிய காலத்துக்குள் முடிந்து விடும் எனவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் இந்திய அரசின் உதவியை மறைமுகமாக பெற்றுக்கொள்கிறது. என்பதையே இது காட்டுகிறது.

அது மட்டும் மன்றி இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் இருந்து உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான ஆலோசனையும் பெறப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட ஆளுமையை வைத்துக்கொண்டு இலங்கை அரசாங்கம் நம்பியாரின் ஆலோசனையை பெற்றிருந்தாலும் கூட, இநதியா என்ற அடிப்படையில் பார்க்கும் போது இந்தியாவின் இராணுவ ஆலோசனைக்காக அந் நாட்டு உதவியை அரசு எதிர்பார்த்திருக்கிறது.

அத்துடன், நாட்டுக்கு நாடு எனற அடிப்படையில், இந்தியாவுக்கு, இலங்கை இராணுவமும் கடற்படையும் அதிக அளவில் சென்று பயிற்சியைப்பெற்று வருகின்றமையையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை,யாழ்.மாநகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமினை அப்புறப்படுத்த வேண்டும் என 3ஆம் சுற்றுப்பேச்சு வார்த்தையில் புலிகளால் வலியுறுத்தப்பட்டது. அதற்கமைய விடுதலைப்புலிகளும்,அரசியல்வாதிகளும்,சிவில் அமைப்புக்களும் அழுத்தம் கொடுத்தே வந்துள்ளன.

ஆனால் ,பலாலி போன்ற இராணுவ உயர் பாதுகாப்பு முகாம்களை அகற்றுவதற்கு அரசு இணங்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.இது சாத்தியப்படாத விடயமாகவே இருக்கும்.

இதற்கு எந்த விதமான அழுத்தம் கொடுத்தாலும் அரசு இணக்கம் தெரிவிக்காது என்பதையே தற்போதைய நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுவதாகவும் தெரிவித்துள்ளனர். (உ-10)

## போர் என்ற பேச்சுக்கே இடமில்லை!

# சமாதானப் பாதையில் பயணம் தொடர சர்வதேச அழுத்தம் வழி வகுத்துள்ளது

## சமாதானக் கூட்டமைப்பு மத்திய நிலையப் பணிப்பாளர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் கடற்படையினரும் தமது எண்ணப்படி நடப்பதை தவிர்த்து பேச்சுவார்த்தையை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் சமாதான கூட்டமைப்பு மத்திய நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்றைய சமாதான நிலைமை தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட பேராசிரியர் ஜயந்தசெனவிரத்தன,

இரு தரப்பினரும் மீண்டும்ஓர் யுத்தத்திற்கு செல்ல மாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன்.யுத்தம் செய்வதை மக்கள் விரும்பவுமில்லை.

யுத்த நிறுத்தத்தின் பலாபலன்களை வடக்குத் தெற்கு மக்கள் நன்றாகவே உணர்ந்து வருகின்றனர்.

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இரு தரப்புகளும் சமாதான பாதையிலே தொடர்ந்தும் பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே சமாதான பேச்சுவார்த்தைகள் மேலும் பலப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

சில குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பினும் பேச்சு மேசையில் இருந்து இரு தரப்பினரும் வெளியேற மாட்டார்கள்.

இடையிடையே ஏற்படும் பிரச்சினைகளை சமாளித்து குறைபாடுகளை தீர்த்துக்கொண்டு சர்வதேச சமூகத்தவரது ஒத்துழைப்பினையும் பெற்று அதற்கான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடல் விவகாரம் தற்போது பெரும் பிரச்சினைக்குரிய விடயமாகவுள்ளது.நிலப்பிரதேசம் குறித்தே யுத்த நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் கடல் எல்லைப் பிரதேசங்களிலும் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அண்மித்த கடல் பிரதேசத்திலும் இரு தரப்பினரும் கடந்த காலங்களில் தம் விருப்பப்படி நடந்து கொண்டனர்.எனவே தான் துப்பாக்கிப்பிரயோகங்கள், கப்பல் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் இடம் பெற்றன.

எனினும் இரு தரப்பினரும் இவை குறித்த நீண்டபேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

அதில் இவ்வாறான சம்பவங்கள் குறித்து கவலையும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

போராடிய இயக்கம் விடுதலைப்புலிகளேதவிர முஸ்லிம்கள் இல்லை என்பதே விடுதலைப் புலிகளினது கருத்தாகும்.

எனினும்பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பெறமுடியும் என்பதே வடக்கு கிழக்குப்பிரதேச முஸ்லிம்களின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஏனில் சமஷ்டி முறை ஏற்படுவதனால் அவர்களுக்குக்கிடைக்கும் இடம் என்ன?என்பது குறித்து அறியாமல் சமஷடி முறை ஏற்படுத்தப்பட்ட பின் விடுதலைப்புலிகளிடம் இருந்து ஒரு தீர்வினைபெறுவதில் அவர்களுக்கு விருப்பமில்லை. அது தான் இங்குள்ள ஒரே பிரச்சினையாகும்.

எனினும் முதலில் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பங்களிப்பினை விடுதலைப்புலிகள் எதிர்த்தனர்.ஆனால் தற்போது அங்கு இணக்கப்பாடொன்று ஏற்பட்டுள்ளது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பு கலந்து கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு முஸ்லிம் மககளிடம் வரவேற்பைப் பெறுவதாக இருக்கும். எதிர்வரும் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தகுந்த முடிவு கிட்டும் என்றும் கருதுகிறேன் என்று தெவித்துள்ளார். (உ)

## புலிகளை அழித்தொழிக்க

# தற்கொலைப் படை அமைக்க சிஹல உறுமய தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிட தற்கொலைப்படை ஒன்றையமைக்க சிகல உறுமய தீர்மானித்துள்ளது.

இத்தகவலை வெளியிட்ட அந்த கட்சியின் பிரசாரச் செயலாளர் உதயபிரபாத் இது தொடர்பாக கருத்துக்கூறுகையில்,

முன்னெச்சரிக்கைத் தாக்குதலை விடுதலைப்புலிகள் மீது தொடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கான பலத்தைப பெற்று வருவதுடன் தமது படை வீரர்களைப் பலப்படுத்தியும் வருகின்றனர்.

இதை நாங்கள் என்றோ எடுத்துக் கூறியபோது எவரும் ஏற்கவில்லை.

புலிகளின் பலம் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற இந்தவேளையில்,அவர்கள் படையினரைத் தாக்கும வரை காத்திராமல் இன்றே புலிகள் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

இந்த வகையில் ,தற்கொலைப் படை ஒன்றை அறிமுகப்படுத்தி புலிகளை அழித்தொழிக்கும் எமது திட்டத்திற்கு பொது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். (உ)

# முதியோர் தொடர்பான விபரத் திரட்டுக்கு நடவடிக்கை

(சுதுமலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரோக்கியமான வயது முதிர்தலுக்கான வேலைத்திட்டம் வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்களால் கிராம ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று சென்ற வாரம் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நவமலர் கனகரத்தினம் தலைமையில் வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இப்பகுதிகளில் உள்ள சகல 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் தொடர்பான விபரங்களும் பெறப்பட்டு,இதன் மூலம் அவர்களது எதிர்பார்ப்புகள் அவர்களிற்கு தேவையான செயற்திட்டங்கள் என்பவற்றை கண்டறிவது எனத் தீர்மானிக்கப்பட்டது.(உ-252)

# பொருள்உதவிகளை வழங்க ஜப்பான் முன்வருகை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொளளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதி உதவி மட்டுமன்றி பொருள் உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் கோசி முஷிகா இதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ஜப்பான் வழங்கவுள்ள பொருள் உதவிகள் முறையாகப் பயன்படுத்தப்படுவதை நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோர் கவனிப்பர் எனவும் ஜப்பானியத் தூதரக முதலாவது செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# வட்டு. மத்திய மருந்தகம் 5 நாட்கள் இயங்கும்

(சுதுமலை)

வலிமேற்குப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம் இந்த வாரம் முதல் வாரத்தில் 5 நாட்களும் மாலை வேளையில் இயங்கவுள்ளது.

வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் இவ்வைத்தியசாலை இதுவரை வாரத்தில் இரு நாட்கள் மட்டும் மாலை வேளையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தொல்புரம் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி கே.மகேந்திரனை வாரத்தில் 5 நாட்களிலும் மாலை வேளைகளில் வட்டுக்கோட்டை மத்திய மருந்தகதில் கடமையாற்ற யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

## திருமலையில் வெண்புறா நிறுவன செயலகம்

(திருகோணமலை)

நோர்வே,ஜேர்மனி ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் திருகோணமலை ஆனந்தபுரியில் வெணபுறா நிறுவனத்தின் செயலகமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினசிங்கம், திருமலைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

## தொழிற் பயிற்சி நிலையம்

(திருகோணமலை)

திருகோணமலையில் ஐந்து கோடி ரூபா செலவில் நவீன தொழிற் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சா மகிந்தசமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத் தொழிற் பயிற்சி நிலையத்துக்கான செயலகம் நேற்று முன்தினம் திருகோணமலை அபயபுரத்தில் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது. (இ)

## ஈஸ்வரம்மா தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினரால் நடாத்தப்படும் ஈஸ்வரம்மா தின விழா எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மந்திரம், பஜனை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஸ்ரீமதி ஜனனியின் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.(உ-10)

## சரஸ்வதி சிலை அமைப்பு

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புதிதாக சரஸ்வதி திருவுருவச் சிலை நிறுவும் பணி நடைபெற்று வருகின்றன.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை கலாசாலை அதிபர் சூ.சிறிஸ்கந்த மூர்த்தி மேற்கொண்டு வருகின்றார். (உ-79)

# ஈராக்கின் இடைக்கால அரசு பற்றி ஆலோசிக்க தேசிய மகாநாடு

## 250 பிரமுகர்களுக்கு அமெரிக்கா அழைப்பு

(பக்தாத்)

ஈராக்கில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பாக ஆலோசிப்பதற்காக தேசிய மகாநாடொன்றை இன்னும் 4 வாரங்களுக்குள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு 250 அரசியல் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் பக்தாத்தில் தற்போதுள்ள இடைக்கால நிர்வாகி ஜேகார்னர் நடத்திய கூட்டத்தின் போதே இக்கூட்டத்திற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை,ஈராக்கின் எதிர்கால அரசினை உருவாக்கும் அமெரிக்க முயற்சிகளை எதிர்த்து நூற்றுக்கணக்கான ஷியா கிளர்ச்சியாளர்கள் பக்தாத்தில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே ஒரு வளமான ஈராக்கை உருவாக்கப் போவதாகவும் இதற்காக ஈராக்கிற்கெதிரான பொருளாதார தடைகளை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை மீண்டும் வற்புறுத்தப் போவதாகவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் உறுதியளித்துள்ளார்.

### ஈராக்கிய யுத்தக் கைதிகள்

ஈராக்கின் யுத்தக் கைதிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான நீதிமன்றம் தொடர்பாக அமெரிக்கா இன்னும் இறுதி முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை.

இவர்கள் தொடர்பான விசாரணைகளை மத்திய கிழக்கு நாடுகளின் நீதி மன்றங்கள் மூலம் விசாரிப்பதுஏற்றதாகும் என்று சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதற்கான உதவிகளை ஜோர்தான், எகிப்து போன்ற நாடுகள் மூலம் பெற்றுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியாத நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (பி-2)

# ரஷ்ய-அமெரிக்க விண்வெளி கூட்டு ஆய்வுகளுக்கு ஆபத்து?

(மொஸ்கோ)

சர்வதேச விண்வெளி மையத்தை பராமரிப்பதற்கான செலவுகளை அமெரிக்கா குறைத்துள்ளதால் அமெரிக்க-ரஷ்ய விண்வெளி கூட்டு செயற்பாடுகள் பாதிப்புறும் நிலையேற்பட்டுள்ளது.

இதேசமயம், ரஷ்ய சோயுஸ் விண்வெளிக்கலம் சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடைந்துள்ளது.

ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தில் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த இரு விண்வெளி வீரர்களும் சர்வதேச விண்வெளி மையத்தை நோக்கி கடந்த சனிக்கிழமை புறப்பட்டனர்.

கடந்த நவம்பர் முதல் சர்வதேச விண்வெளி மையத்தில் கடமையாற்றும் மூன்று விண்வெளி வீரர்களுக்குப் பதிலாக இவர்கள் பொறுப்புக்களை ஏற்கவுள்ளனர்.

கடந்த பெ்ரவரி மாதம் கொலம்பிய விண்கல விபத்து நடைபெற்றதில் இருந்து ரஷ்யாவின சோயுஸ் விண்கலமே சர்வதேச விண்வெளி மையத்திற்கு விண்வெளி வீரர்களை எடுத்துச் செல்லப்ப பயன்படுத்தப்படுகின்றது.

கொலம்பிய விண்கல விபத்த நடைபெற்றதில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்திற்கான நிதிய்யை அமெரிக்கா குறைத்துள்ளது. இதற்கு ரஷ்யா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா தொடர்ந்து நிதியளிக்க தவறினால் இரு நாடுகளின் கூட்டு முயற்சியான சர்வதேச விண்வெளி மையத்தை தொடர்ந்தும் இயக்க முடியாமல் போகும் என ரஷ்ய கூறியுள்ளது.

அத்துடன் அடுத்த தடவை அமெரிக்க விண்வெளி வீரர்களை தமது விண்கலத்தில் ஏற்ற முடியாதெனவும் ரஷ்யா கூறியுள்ளது. (பி-2)

# சார்ஸ் அச்சத்தால் இந்திய விமானிகள் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

சார்ஸ் நோய் பரவியுள்ள நாடுகளிற்கு பயணங்களை மேற் கொள்ள மாட்டோம் எனக் கூறி இந்திய எயர் விமான நிறுவன விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தம் சட்டத்திற்குப் புறம்பானதென மத்திய அரசு கூறுகின்றது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிலாளர் நலத்துறை அமைச்சுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாடாளுமன்றத்தில் நேற்று முனதினம் மத்திய அரசு அறிவித்தது.

விமானங்களை இயக்க மறுத்து வரும் விமானிகள் 15 பேரை இடைநீக்கம் செய்துள்ளதாகவும் 50 விமானிகளிடம் விளக்கம் கோரி அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு மேலும் தெரிவித்துள்ளது.இந்திய விமானிகள் சங்கம் விடுத்துள்ள அறிவித்தலின் அடிப்படையிலேயே விமானிகள் பணிக்குத் திரும்ப மறுத்துள்ளதாகவும் இதனால் கடந்த சனிக்கிமை 800 பயணிகள் தமது பயணத்தை தொடர முடியாமல் திரும்பியதாகவும் கூறப்படுகின்றது. (பி-2)

# ஆர்ஜென்டீன அதிபர் தேர்தல் மீண்டும் நடைபெறும்

(ப்யூனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டீனாவில் இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஹாலோஸ் மெனன் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னணி வகிக்கின்றார்.

எனினும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்குத் தேவையான அதிகப்படியான வாக்குகளைப் பெறாததால் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி மீண்டும் தேர்தல் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எண்ணப்பட்ட 98 வீதமான வாக்குகளில் முன்னாள் ஜனாதிபதி காலோஸ்மெனன் 30 % வாக்குகளையும் பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஹேஜ்னர் 22 வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர். (பி-2)

# இந்தியா சமாதான முயற்சிகளுடன் போருக்கும் தயாராக வேண்டும்

## விஸ்வஹிந்து பரிசத்தின் தலைவர் வேண்டுகோள்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் போர் புரிய இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்று விஸ்வஹிந்து பரிசத்தின் தலைவர் பிரவீன்ரொகாடியோ கேட்டுக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தவித தவறும் இல்லை என்று கூறிய அவர்,

சமாதான முயற்சிகளுடன் போருக்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறியிருக்கிறார்.

இந்திய பாகிஸ்தான் பிரச்சினை குறித்து செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட பிரவீன் ரொகாடியோ எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறு பாகிஸ்தானை அபிவிருத்தியடைந்த நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (பி-2)

# கூட்டுப்படை தாக்குதலின் பின்னரும் சதாமை உயிருடன் கண்டேன்

## முன்னாள் துணைப்பிரதமர் தகவல்

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதியை குறிவைத்து அமெரிக்கக் கூட்டுப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு விமானத் தாக்குதல்களிலும் சதாம் ஹுசைன் உயிர் தப்பி விட்டார் என்று ஈராக்கின் முன்னாள் துணைப் பிரதமரும் கடந்த வெள்ளியன்று அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்த வருமான தாரிக் அஸீஸ் அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின் போது இவ்வாறு கூறியுள்ளார்.

மார்ச் 19 ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 7 ஆம் திகதி ஆகிய தினங்களில் அமெரிக்க விமானங்கள் சதாமை குறிவைத்து பாரிய தாக்குதல் நடத்தின.

எனினும் இத்தாக்குதலில் இருந்து சதாம் ஹுசைன் உயிர் தப்பிவிட்டார் எனவும் பின்னர் தாம் சதாம் ஹுசைனை உயிருடன் பார்த்ததாகவும் இந்த விசாரணையின் போது தாரிக் அஸீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாரிக் அஸீஸ் ஏனைய கேள்விகளுக்கு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கி வருகின்றார் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. (பி-2)

### ரஷ்யாவிடம் இந்தோனேஷியா விமானங்கள் வாங்கும்

(மொஸ்கோ)

இந்தோனேஷியா ரஷ்யாவிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

190 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 4 போர் விமானங்களையும்,இரண்டு ஹெலிகொப்ரர்களையும் இந்தோனேஷியா ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை கடந்த 24 ஆம் திகதி ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (பி-2)

# எகிப்தில் அந்திரெக்ஸ் தாக்கி கப்பல் சிப்பந்தி மரணம்

(கெய்ரோ)

எகிப்தில் வர்த்தகக் கப்பல் ஒன்றில் கடமையாற்றிய சிப்பந்தியொருவர் அந்திரெக்ஸ் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார்.

எகிப்தின் வடக்கு பெஷீல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர் கனடாவுக்கு கொண்டு சென்ற ஒரு பொதியிலேயே அந்திரெக்ஸ் கிருமி இருந்துள்ளதாகவும் இவர் பொதியினைத் திறந்ததும் அதன் தாக்கத்திற்குள்ளாகியிருக்கின்றார்.

அந்திரெக்ஸ் தாக்கத்திற்குள்ளான இப்ராகிம் சுஹைமான் என்பவர் உயிரிழப்பதற்கு முன்னர் வாந்தியெடுத்துள்ளார் என்றும், அவரது உடம்பில் இரத்தக்கசிவு ஏற்பட்டதாகவும் மரண விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக பெஷீல் பொலிஸார் கூறுகின்றனர்.

இவரது சடலத்தை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களும் இத்தாக்கத்திற்குள்ளாகி நோய் வாய்ப்பட்டுள்ளனர் என்று மேலதிக தகவல்கள்கூறுகின்றன.(பி-2)

# சார்ஸ் பரவக்கூடும் என்ற பயத்தில் கழிவகற்றும் நிறுவனத்துக்கெதிராக கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

(தைபீ)

சார்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் வைத்திய சாலையிலிருந்து மருத்துவக் கழிவுப் பொருட்களை அகற்றும் தாய்வான் நிறுவனம் ஒன்றுக்கு முன்பாக நூற்றுக்கணக்கான கிராமத்தவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மருத்துவக் கழிவுப் பொருட்களை அகற்றி வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதன் மூலம் சார்ஸ் நோய் மேலும் பரவக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே கிராமத்தவர்கள் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தமது கிராமங்களில் சார்ஸ் நோய் அறிகுறி தற்போது இல்லை எனவும் மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் இருந்து சார்ஸ் நோயாளிகளின் மருத்துவக் கழிவுப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதனால் அது தமது கிராமத்தை வெகுவாகப் பாதித்து விடுமெனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையிலிருந்து மருத்துவக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டாம் என்ற சுலோகங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தொங்கவிட்டிருந்தனர். (பி-2)

# சார்ஸ் நோய்க்கு தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்படும்

## சுவிற்சர்லாந்து நம்பிக்கை

(பேர்ன்)

சார்ஸ் நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது அதற்கு எத்தகைய மருந்து வகைககள் தேவை என்பது தொடர்பான மருத்துவ ஆய்வுகளை யூலை மாத இறுதியில் ஆரம்பிக்கப் போவதாக சுவிற்சர்லாந்து சுகாதார நலன் பேணும் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போது சிறுசிறு பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதுடன் அதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

யூலை மாதம் இந் மருத்துவ பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவ்டையும் பேது இதற்குரிய தடுப்பு மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விடப்படும் என ரோஜ்ஹெல்டிங் ஏ.யு.என்ற அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இதேவேளை, தீவரமாகப் பரவி வரும் இந்த நோயினால் மேலும் 8 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதுடன் 203 பேர் இந் நோய்க்குள்ளாகியிருக்கின்றனர்.

இதனால் சீனாவில் சார்ஸ் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளதுடன் நோய் தொற்றியவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 106 ஆக உயர்ந்துள்ளது.

சீனாவின் பீஜிங் நகரில் மட்டும் இந்த நோயினால் 59 பேர் உயிரிழுந்துள்ளதாக சீன சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (பி-2)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 14 ஆக்கம்: சுந்தர்வெளியீடு

❖ இப்பந்தியை கவனமாக வாசிக்க.

இந்த நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு எதுவென்று கேட்டால் கம்பியு,ட்டர் தான் என்று கூசாமல் சொல்லலாம். இதைக் கணிப்பான், கணனி, கணிப்பொறி என்று பலவாறாக குறிப்பிடுவர். கம்பியு,ட்டர் என்ற சொல் மிகவும் பிரபல்யமாகி விட்டதால் நாம் அதைக் குறிப்பிடும் போது கம்பியு,ட்டர் என்றே கூறுகின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக இதன் உருவம் மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. இன்று வீடுகளில் பயன்படுத்தத்தக்க வீட்டுக் கம்பியு,ட்டர்களும் சந்தைக்கு வந்துவிட்டன. கம்பியு,ட்டர்களைப் பற்றி நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? நாம் கம்பியு,ட்டர்களை வாங்கப்போவதில்லையே. எங்களுக்கு கம்பியு,ட்டர்களை இயக்கவும் தெரியாதே. இதனால் என்ன பிரயோசனம்? இவை போன்ற கேள்விகள் உங்கள் மனதில் எழலாம். இது நாள் வரை மக்களை கல்வியறிவுள்ளோர், கல்வியறிவில்லாதோர் என்று இருவகையாகப் பிரித்தனர். வருங்காலத்தில் கம்பியு,ட்டர் அறிவு உள்ளவர், கம்பியு,ட்டர் அறிவு இல்லாதவர் என மக்களைப் பிரிக்க வேண்டிய காலம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

❖ இப்பந்தியில் உள்ள தகவல் அடிப்படையிற் சுருக்கமாக விடை எழுதுக

01. இந் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு எது? ----------------
02. கம்பியூட்டர்களுக்கு வழங்கப்படும் வேறு இரு பெயர்களை எழுதுக? ----------------
03. சந்தை என்ற சொல்லுக்கு ஒத்தசொல்லை எழுதுக? ----------------
04. ஆச்சரியம் என்ற சொல்லுக்கு ஒத்த சொல் ஒன்றை எழுதுக? ----------------
05. மக்களை எவ்வாறு வகைப்படுத்தி வைத்துள்ளனர்? ----------------
06. ''ஆண்டுகள்'' என்னும் சொல்லின் ஆங்கிலச் சொல்லை எழுதுக? ----------------
07. ''வந்துவிட்டன'' என்னும் சொல் எக்காலத்தில் அமைந்துள்ளது? ----------------
08. ''நூற்றாண்டு'' என்றால் என்ன? ----------------
09. உருவம் என்ற சொல்லின் எதிர்ச் சொல் என்ன? ----------------
10. ''உள்ளம்'' என்ற சொல்லின் பொருள் தரும் சொல் ஒன்று பந்தியில் உள்ளது. அதனை அருகே உள்ள இடைவெளியில் எழுதுக? ----------------

**கோபம், அழுகை, சந்தோசம், ஏமாற்றம்**

❖ மேலே உள்ள கூட்டினுள் உள்ளவை எமக்குள் ஏற்படும் சில உணர்வு மாற்றங்களாகும். இவற்றை தொடர்ந்துவரும் வினாக்களில் பொருத்தமானவற்றுக்கு நேரே எழுதுக.

11. நாம் அன்பு வைத்து பழகிய ஒருவர் எம்மை விட்டு விலகி வேறோர் இடம்செல்லும் போது எமக்குள் ஏற்படுவது ----------------
12. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ஒருவரில் ஏற்படும் உணர்வு ----------------
13. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவேண்டும் எனும் நோக்கோடு கடுமையாகப் படித்தும் 1 புள்ளியால் புலமைப்பரிசில் கிடையாது போகும் ஒருவரின் மனதில் ஏற்படும் உணர்வு ----------------
14. தான் செய்வது தவறு எனத் தெரிந்து கொண்டும் தவறைச் செய்த ஒருவரில் ஏற்படும் உணர்வு ----------------

**மது அருந்துதல், புகைப்பிடித்தல், களவெடுத்தல், பொய் கூறல்**

❖ மேலே உள்ள கூட்டினுள் உள்ளவை சில தீய நடத்தைகள் ஆகும். இவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இப்பாதிப்புகளுடன் தொடர்புபடும் தீய நடத்தைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.

15. அன்பற்ற கூடாத வார்த்தைகளைக் கூறுதல் வீண் சண்டைக்கு செல்லுதல் ----------------
16. சுவாச நோய்கள், இருதய நோய்கள் ஏற்படுதல் ----------------

❖ இப்பந்தியை வாசிக்குக.

இல 15 மிலாகிரி ஒழுங்கை புங்குடுதீவைச் சேர்ந்தவரும் தற்போது 106 **C.D.I** வீட்டுத் தொகுதி மன்னிங் இடம் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சண்முகசுந்தரம் தவராசாவின் மகன் பிரதீப் அவர்கள் 28.03.2003 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

17. இப்பந்திக்குப் பொருத்தமான தலைப்பு
 1) 31ஆம் நாள் நினைவஞ்சலி 2) செய்தி 3) மரண அறிவித்தல் 4) காலமாதல்
18. இறந்தவரின் சொந்த இடம்
 1) கொழும்பு 2) மிலாகிரி 3) புங்குடுதீவு 4) யாழ்ப்பாணம்
19. இறந்தவரின் தந்தையாரின் பெயர்
 1) பி.சின்னராசா 2) க.செல்வராசா 3) ச.தவராசா 4) சு.முத்துராசா
20. அகாலமரணம்
 1) இயற்கை மரணம் 2) திடீர் மரணம் 3) நோயால் மரணம் 4) நீரில் மூழ்கி மரணம்
21. தற்போது அவர்கள் வசிக்கும் வீட்டு இலக்கம்
 1) 15 2) 106 3) **C.D.I** 4) 15/16
22. இவர் இறந்த மாதத்தினை அடுத்து வரும் மாதத்தின் முதலாம் திகதி
 1) ஞாயிறு 2) வியாழன் 3) செவ்வாய் 4) சனி


❖ இங்கு இரு நிரல்களில் தகவல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நிரல் 1இல் உள்ள தகவலுடன் சரியாகத் தொடர்புறும் தகவலை நிரல் 2இல் இருந்து தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை நடுவே உள்ள கூட்டினுள் எழுதுக. உதாரணத்தை கவனமாக அவதானிக்க.

| | நிரல் 1 | | நிரல் 11 |
|---|---|---|---|
| | மருத்துவர் | (5) | 1. முஸ்லிம்கள் |
| 23. | 52 வாரம | | 2. அபிவிருத்தி |
| 24. | பள்ளிவாசல் | | 3. ஒளி |
| 25. | மாடிக்கட்டடம், மின்சாரவசதி | | 4. மலைப்பிரதேசம |
| 26. | பறவைஇனம் | | 5. நோயாளர் |
| 27. | செயற்கைப் பசளை | | 6. உயிருள்ளவை |
| 28. | மண்ணரிப்பு | | 7. ஒரு ஆண்டு |
| 29. | கண் | | 8. யூரியா, பொட்டாசியம், சல்பேற்று |
| 30. | தேவாலயம் | | 9. கிறிஸ்தவர்கள் |
| 31. | விகாரை | | 10. பௌத்த சமயத்தவர்கள் |

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக

32. இலங்கையின் முதல் ஜனாதிபதி
 1) **J.R.**ஜெயவர்த்தனா 2) சேர் வில்லியம் கோபல்லாவ 3) டிங்கிரி பண்டா விஜயதுங்கா 3) சந்திரிகா பண்டாரநாயக்கா
33. இலங்கையில் சுதந்திரவர்த்தக வலயம் அமைந்துள்ள இடம்
 1) கொழும்பு 2) கட்டுநாயக்கா 3) கெந்தல 4) வியாங்கொட
34. இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு
 1) 1998இல் 2) 1945இல் 3) 1972இல் 4) 1939இல்
35. இலங்கையின் பரப்பளவு
 1) 225 கிலோமீற்றர் 2) 435 கிலோமீற்றர் 3) 65, 610 சதுர கிலோ மீற்றர் 4) 65, 610 கிலோமீற்றர்
36. நிலைக்குத்துத் தளம்
 1) தரை 2) நீர்மேற்பரப்பு 3) சுவர் 4) சீலிங்

❖ மிகவும் சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.




37. **A B C D** என்னும் பகுதியின் நீளம் யாது? ----------------
38. **E F G H** என்னும் பகுதியின் நீளம் யாது? ----------------
39. இவ்வுருவின் சுற்றளவு யாது? ----------------
40. செவ்வகப் பகுதியின் பரப்பளவு யாது? ----------------
41. 1/2 வட்டப்பகுதியொன்றின் பரப்பளவு 50 சதுர சென்ரிமீற்றர் எனின் இவ்வுருவின் பரப்பளவு யாது? ----------------
42. 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவிற்கு வர்ணம் பூச ஆகும் செலவு ரூபா 10 எனின் இப்பகுதிக்கு வர்ணம் பூச ஆகும் செலவு யாது? ----------------

❖ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக

43. ரூபா 20.00 க்கு 25 ரொபிகள் வாங்கலாம் ஆயின் ரூபா 80.00க்கு எத்தனை ரொபிகள் வாங்கலாம்? ----------------
44. ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை ரூபா 48.00 எனின், 650 கிராம் உருளைக்கிழங்கின் விலை என்ன? ----------------
45. கீழ்வரும் எண் தொடரில் 5ற்கு அடுத்ததாகவும் 7ற்கு முன்பாகவும் வராத 6 என்ற இலக்கங்கள் எத்தனை உண்டு என எழுதுக?
 1996235642677658686716578 ----------------
46. சித்திரை மாதம் 22ஆம் திகதியிலிருந்து வைகாசி மாதம் 12ஆம் திகதி வரை உள்ள நாட்களின் எண்ணிக்கையை எழுதுக ----------------
47. இன்னும் 3 ஆண்டுகளில் எனது தங்கையின் வயது என் வயதிற்கு சமமாகும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் என் வயது என் அண்ணாவின் வயதிற்குச் சமமாகும். இப்போது எனது தங்கையின் வயது 12 ஆண்டுகள் எனின் என் அண்ணாவின் வயது என்ன? ----------------

❖ ஒரு பாடசாலையில் கீழ்வரும் விபரிப்புக்களை குறிக்கும் இடங்களின் பெயர்களை எழுதுக.

48. பாடசாலையின் நிர்வாக வேலைகளை கவனிப்பதற்கு அதிபர் இருக்கும் இடம் ----------------
49. மாணவர்கள் கற்பதற்காக எல்லோருமாக இருக்கும் இடம் ----------------
50. வாசிப்பதற்காக நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள இடம் ----------------
51. இரசாயனப் பொருட்கள் பரிசோதனைக்கான உபகரணங்கள் அடுக்கிவைக்கப்பட்டுள்ள இடம் ----------------
52. பாடசாலை மாணவர்கள் உடற்பயிற்சி செய்யவும், விளையாட்டுக்களை விளையாடவும் என அமைந்துள்ள இடம் ----------------

❖ கீழே தரப்படும் அங்கிகள் எவ்வாறு எமக்கு உதவுகின்றன என எழுதுக.

53. நாய் ----------------
54. எருது ----------------
55. காகம் ----------------

❖ இப்பந்தியைக் கவனமாக வாசித்து விடை எழுதுக

அடிக்கடி இடமாற்றம் செய்யப்படாத பூச்சாடிகள், நிலையாகக் காணப்படும் பெருங் கல்லின் கீழ் சிறிய பிராணிகள் சீவிப்பதைக் காணலாம். அவற்றிடையே விசப்பிராணிகளும் காணப்படலாம். அவையெல்லாம் நிழலை நாடியே வாழ்கின்றன.

56. இத்தகைய இடங்களில் வாழும்பிராணிகளில் நீரிலும் நிலத்திலும் வாழும் ஒருவகைப் பிராணியும் காணப்படலாம். அதன் பெயர்
 1) பூரான் 2) தவளை 3) மட்டத்தேள் 4) சிலந்தி
57. கல்லின் கீழ்க் காணப்படும் பிராணிகளில் விஷப்பிராணி அல்லாதது.
 1) பாம்பு 2) பூரான் 3) மட்டத்தேள் 4) அட்டை
58. கற்களின் கீழ் புதிதாக முளைக்கும் தாவரம் ஒன்று காணப்படின் அதன் இலையின் நிறம் என்னவாக இருக்கும்?
 1) பச்சை 2) கடும்பச்சை 3) மஞ்சள் 4) சிவப்பு
59. இப்பிராணிகள் இவ்விடங்களில் இருப்பதற்கான காரணம்
 1) ஈரலிப்பு 2) நிழல் 3) பாதுகாப்பு 4) மேற்சொன்ன மூன்றும்
60. அடிக்கடி என்பதன் பொருள்
 1) எப்போதும் 2) உடனுக்குடன் 3) சிலவேளை 4) அடித்தல்
61. பூச்சாடி என்பது
 1) பெயர்ச்சொல் 2) வினைச்சொல் 3) பெயரெச்சம் 4) வினையெச்சம

❖ கீழே சில உலகக் குறியீடுகள் தரப்படுகின்றன. அவற்றுக்கான விளக்கத்தை எழுதுக.

62. கறுப்புத் துணிப்பட்டி ----------------
63. சிவப்பு விளக்கு ----------------
64. மஞ்சள் கொடி ----------------
65. கண்கள் கட்டப்பட்டு தராசு வைத்திருக்கும் பெண் ----------------
66. செஞ்சிலுவை ----------------

❖ பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளின்போது கீழே தரப்பட்டுள்ள பொருட்களை/போட்டியாளர்களின் நிலைகளை அவதானிக்கலாம். இவற்றை நன்கு அவதானித்து இந்த நிலைகள்; பொருட்களுக்குரிய பெயர்களை எழுதுக.

67.


----------------

68.


----------------

69.

----------------

70.

----------------

❖ அருகே தரப்பட்டுள்ள படத்தில் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளின் சரியான ஆங்கிலப் பெயர்களை எழுதுக




71. **A** ----------------
72. **B** ----------------
73. **C** ----------------
74. **D** ----------------
75. **E** ----------------

❖ ''நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால'' என்னும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

76. ----------------
77. ----------------
78. ----------------
79. ----------------
80. ----------------
81. ----------------

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 12

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு

01. ம.கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
02. ப.கௌசிகேசன்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
03. ம.வித்தியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
04. ஸ்ரீ.கானப்பிரியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
05. ச.ஜெயாசுதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
06. சி.துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
07. த.கபிலன்- யா/பரியோவான் கல்லூரி
08. செ.சர்வகா- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
09. பி.கௌசிகா- வல்வை அ.மி.த.க பாடசாலை
10. இ.மதனிகா- வல்வெட்டி விநாயகர்வித்தியாலயம்
11. பி.ஜோதிகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
12. பி.நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
13. ச.ஜயகணேஷ்-கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
14. த.தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
15. ம.அவிவர்ஷனி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
16. து.வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
17. கே.சோபனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
18. சி.மதுசன்- வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
19. ம.சரண்யன்- ஆவரங்கால் நடராஜஇராமலிங்க வித்தியாலயம்
20. ப.லேக்கா- யாழ்ப்பாணக் கல்லூரி
21. சி.அபிராமி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
22. த.தனுசியா- அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
23. பா.சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
24. பி.யோபிதா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
25. தி.சுஜிக்கா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
26. கு.ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
27. கா.சயானி- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
28. சு.கிருசாந்த்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
29. தி.ரஜிக்கா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
30. ந.வினோருபன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
31. வி.விநுர்சன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
32. யோ.துசிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
33. யோ.டினோயன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
34. பா.தனுஜன்- கோப்பாய் மகாவித்தியாலயம்
35. இ.பவிசன்- உடுவில் மகளிர் கல்லூரி
36. பு.லதுசா- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
37. அ.கீர்த்தனா- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
38. சி.கெஜரூபன்- தாவடி இந்து த.க. பாடசாலை
39. பூ.திலக்சி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
40. உ.விதுசன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
41. பு.நிலக்சி- வதிரி திரு இருதயக் கல்லூரி
42. கு.மதிவாணி- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
43. ப.சுகீர்த்தனா- தேவரையாளி இந்துக் கல்லூரி
44. மா.சர்மிளன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
45. சி.கனிஷ்லா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
46. யோ.விதுர்சன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
47. ச.கோபிகா- வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை
48. ம.இந்துஜா- மல்லாகம் கனிஸ்ர வித்தியாலயம்
49. சி.டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
50. சி.மனோஜிதன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
51. ந.நிரோசஜன்- நவாலி சென்பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை
52. தி.கௌரி- திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை
53. இ.ஸ்ரீவதனா- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
54. த.பிரியந்தி- கரவெட்டி மாணிக்க விநாயகர் வித்தியாலயம்
55. வி.துஷ்யந்தன்- நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்
56. த.விஜிதா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
57. தி.ஜேனற்குமரன்- கோப்பாய் றோ.க.த.க பாடசாலை
58. ந.சரண்யா- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
59. சு.ஹிருசுபா- வட இந்து மகளிர் கல்லூரி
60. சு.வாகீசன்- புனித திரேசா மகளிர் கல்லூரி
61. சி.தேவகி- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
62. மு.பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை
63. பு.மீரா- திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை
64. ச.சஜிதீப்- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
65. ஜெ.சுமணயா- ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்
66. அ.ஜெயந்தி- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
67. சி.ஸஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
68. இ.கிரிசாந்த்- யா/மத்திய கல்லூரி
69. கு.சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
70. கீ.அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
71. பா.தினேஸ்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
72. மு.கீதாயினி- புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்
73. இ.விஜயா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
74. ச.துளசிராம்- தாவடி இ.த.க. பாடசாலை
75. ச.உஜேந்தன்- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
76. கு.துஷ்யந்தினி- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
77. பு.உஷாந்தி- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
78. ஈ.கோபிதன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
79. தி.தசேந்திரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
80. ச.மேனுசா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
81. ம.சுகந்தினி- கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்
82. அ.தர்சனா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
83. ச.பிரசாந்த்- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
84. ஆ.நிரோஜினி- நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலை
85. ஸ்ரீ.திலக்ஷி- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
86. பு.பவிகரன்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
87. சா.மதுரா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
88. கோனேஸ்வரன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
89. க.யசோதரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
90. ஜெ.ஸ்ரீராம்- மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை
91. த.நிருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
92. தி.கோபிகா- உடுவில் மகளிர் கல்லூரி
93. க.லோகராஜ்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
94. ஸ்ரீ.கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
95. மி.விஜுஷா- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
96. இ.வாகீசன்- வேலணை நடராஜா மகாவித்தியாலயம்
97. உ.கோபிகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
98. யோ.லவிஜெனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
99. ர.மதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
100. செ.கவிஸ்ரா- நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலை
101. க.தக்ஷா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
102. சீ.சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
103. க.பிருதிபராஜ்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
104. பா.சாயிபவானி- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
105. ச.அபிநயா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
106. சி.சஞ்சிகா- ஆனைக்கோட்டை பாலசுப்ரமணியம் வித்தியாலயம்
107. து.வினிஸ்ரன்- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
108. கு.விஜிதா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
109. ஐ.சயோராஜ்- யா/மத்திய கல்லூரி
110. ம.சிவரோஜன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
111. லி.கருஷன்- இணுவில் மத்திய கல்லூரி
112. சி.கயந்தி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
113. ம.சரண்யா- சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
114. வி.தனுசிகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
115. சி.ஜோதிகா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
116. து.பிரபாநந்தி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
117. ச.சுவஸ்திகா- இருபாலை சீ.சீ. தமிழ் கலவன் பாடசாலை
118. ஜெ.சங்கீதா- சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்
119. ச.தனேஷன்- திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை
120. ந.பவிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
121. ச.வேனிலன்- இணுவில் மத்திய கல்லூரி
122. சி.சுஜீபா- வேலணை நடராஜ மகாவித்தியாலயம்
123. வி.மேனஜா- நவாலி மகாவித்தியாலயம்
124. சி.தயனி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
125. வே.பிரசன்ஜா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
126. பொ.கோகிலன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
127. ச.அனுசா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
128. அ.டெல்சிடானியா- சக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை
129. ச.லேனுகா- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
130. ர.மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
131. கி.யாழினி- நவாலி மகாவித்தியாலயம்
132. க.பிரஸாயினி- கோண்டாவில் சீ.சீ.த.க பாடசாலை
133. பே.யதீஸ்கரன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
134. சி.சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
135. பா.சியாமளா- நவாலி மகாவித்தியாலயம்
136. த.தமிழினி- நவாலி மகாவித்தியாலயம்
137. செ.திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
138. ஜெ.கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
139. பா.சசீந்திரன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
140. லோ.பவிதா- பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை
141. இ.சரணிகா- நவாலி மகாவித்தியாலயம்
142. செ.கஜேந்திரன்- யா/புனித பத்திரிசியார் கல்லூரி
143. க.கணபாலன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
144. ப.சிவருக்ஷி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
145. மா.ஸ்ரெலா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
146. ஆ.சேந்தன்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
147. நளாயினி- சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
148. சி.லக்ஷாஜினி- சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
149. க.பாலசேனானி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
150. க.அனுசியன்- சுன்னாகம் திஞானசம்பந்தர் வித்தியாசாலை
151. க.சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
152. க.நிறோஜன்- சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
153. சி.வர்ணன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
154. சி.சேர்ஜன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

## வினாத்தாள் 12இன் விடைகள்

01. செ.உதயன்
02. 833, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
03. 30.01.2003
04. இருவரும் நண்பர்கள்
05. முத்திரை பெறும் நோக்கோடு
06. கடிதம் 07. முத்திரை
08. நன்றி
09. முத்திரைகள், நாடுகள்
10. 1) இன்று
2) நாளை
11. கடல் 12. திசை
13. மழை 14. விண்
15. தம்பி 16. மழை
17. விண், வானம், மேகம்
18. இடி 19. காற்று
20. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, வ.கி (ஈசான மூலை) வ.மே (வாயுமூலை) தெ.கி (அக்கினிமூலை) தெ.மே (நிருதி மூலை)
21. 5, 7, 8, 9
22. 1, 2, 3, or 1, 3, 4
23. 5, 8
24. 6, 10
25. 7, 9
26. பண்டார 27. அபூபக்கர்
28. சாம்பவி 29. அருணி
30. வரன், அப்புசாமி, மஞ்சு
31. கணிதம்
32. தவணை 1 கணிதம், ஆங்கிலம்
33. ஆங்கிலம்
34. தவணை III 445
35. ஆங்கிலம்
36. 210
37. 19.80/=
38. ரூபா 9.00
39. 10 நாட்கள்
40. 3 கிலோகிராம்
41. 36
42. 18
43. ÷
44. விமானம்
45. கார், துவிச்சக்கரவண்டி, புகையிரதம்
46. கப்பல்
47 புகையிரதம்
48. அழகான தேன் நிறைந்த பூவில் வண்ணத்துப் பூச்சி அமர்ந்துள்ளது.
49. அதுதேனை உறிஞ்சிக் குடிக்கின்றது.
50. மண்புழு 51. கங்காரு
52. முயல் 53. பல்லி
54. தேனீ, தூக்கணாங்குருவி
55. மைனா, பருந்து, அணில்
56. கறையான், தேனீ, எறும்பு
57. காகம்
58. தேனீ, கறையான், எறும்பு
59. அணில், எலி, உடும்பு, முயல்
60. மைனா, பருந்து, காகம், தூக்கணாங்குருவி
61. **Tree** 62. **Fish**
63. **Cow** 64. **Rabbit**
65. **Parrot** 66. (3)
67. (1) 68. (1)
69. (2) 70 (4)
71. **Crocodile** 72. **Elephant**
73. **Umbrella** 74. **Fish**
75. **Shirt**

76 - 81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய் பயனிலை யுடன் அமைந்த 6 வாககியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

## யா /போதனா வைத்தியசாலையில்

# புனரமைக்கப்பட்ட சிறுவர் விடுதி நேற்றுத் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

பெயாறிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப் பட்ட யாழ். வைத்தியசாலை சிறு வர் விடுதி நேற்று திறந்துவைக் கப்பட்டது.

சுமார் 18 லட்சம் ரூபா செல வில் புனரமைக்கப்பட்ட இவ்விடு தியை யுனிலீவர் நிறுவனத்தின் தலைவர் அசான் மாலிக் நாடா வெட்டித் திறந்து வைத்ததுடன், பெயர் பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து வைத் திய பரிசோதனைக் கருவிகள், உபகரணங்கள் என்பவற்றை பணிப் பாளர் சதுர்முகனிடம் கையளிக் கப்பட்டதுடன் அவ்விடுதியில் தங்கி யிருந்த சிறார்களுக்கு சிற்றுண்டிப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக் கிளைப் பணிப்பாளர் அமால் கப்றால் பெயா றிஸ் நிறுவனத்தின் கிளை முகாமை யாளர் வித்தியா சிவராஜா ஆகியோ ரும் கலந்து கொண்டனர். (உ-4)

## ஆணைக்குழு அமைந்த பிறகும்

# பொலிஸாரின் கடமைகளில் தலையீடு இருக்கவே செய்கிறது

(கோட்டை)

பொலிஸார் பயமின்றியும் சுதந்திர மாகவும் பாகுபாடில்லாமலும் நடந்து கொள்ள வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியி ருந்த போதிலும், அரசியல்வாதி களால் அச்சுறுத்தப்பட்டும், தாக்கு தலுக்குள்ளாகியும், கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் தடுக்கப் பட்டும் வருகின்றார்கள் என்று சுதந் திர பொலிஸ் ஆணைக்குழு புகார் செய்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் ஆபேசூரிய இதுபற் றிக் கூறுகையில்,

பொலிஸாரின் கடமைகளில் தலையிடும் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து தாங்கள் கவலையடைவதாகவும் அவ்வாறான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லையென்றும் இந்த வகையில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்து உதவுவார் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

அண்மைக்காலத்தில் கம்பஹா யு.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒலித்த பிரேமரட்ண, கொழும்பு யு.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர் விலாந்த பெரேரா மற்றும் காஹா வத்தை (யு.என்.பி) பிரதேச சபைத் தலைவர் போன்றவர்கள் மீது பொலி சாரினால் ஆணைக்குழுவிடம் புகார் கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தொடர்பாக விசேட சலுகைகள் காட்டப்படுதலாகாது. பொலிஸாரைத் தடைசெய்வது, அச் சுறுத்துவது, மற்றும் தாக்குவ தானது பிணை அளிக்க முடியாத குற்றங்களாகும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

"சம்பந்தப்பட்டவர் அரசியல் வாதியாக இல்லாமலிருந்தால் என்ன நடந்திருக்கும்? என்று கேட்ட அவர் உடனடியாகக் கைது செய் யப்பட்டு நீதிவான்முன்னிலையில் நிறுத்தப்பட்டிருப்பார்" என்று அவர் மேலும் கூறினார். (பி)

## ஞானச்சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட் டுப் பேரவையினரால் வெளியிடப்படும் ஞானச்சுடரின் சித்திரை மாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கு விண்ணப்பித்த போதனா சிரிய மாணவர்களின் ஒப்படை தொடர் பான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப 2 மணிக்கு திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத் தில் நடைபெறவுள்ளது. (உ-54)

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

14.04.03 அன்று நல்லூர் முருகன் கோயில்வீதியில் க.அகிலேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல: 686150950V,விசேட அடையாள அட்டை என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் **நவீனா நகையகம்**,இல:189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், **T.P 0777-115625** என்னும் முகவரியில் ஒப்ப டைக்கவும். (C-6084)

### இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணி முதல் மாலை 4 மணி வரை முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி இறுதிப் பரீட்சை நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் அறிவித் துள்ளார். (உ-54)

# மக்களையும் புலிகளையும் அந்நியப்படுத்தும் ஆதிக்க சக்திகளின் முயற்சி வெற்றியளிக்காது

## கல்விச் சமூகத்துடனான கலந்துரையாடலில் கவியழகன்

(கோப்பாய்)

நாங்கள் சமாதானத்தின் எதிரிகளல்ல. நாங்களே இலங்கை அரசுக்குச் சில அழுத்தங்களைப் பிரயோகித்து சமாதானத்தை வரவழைத்தோம். இதன் ஆரம்பகட்டமே எமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தமாகும். ஆகவே தற்போதைய சூழ்நிலையில் எமது செயற்பாடுகள் சமாதானத்துக்கு மேலும் உரமூட்டுமேயன்றி சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக அமையாது என கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற கோப்பாய்க் கோட்ட அதிபர், ஆசிரியர் சந்திப்பு நிகழ்வில் விடுதலைப் புலிகள் அரசியல்துறைப் பிரமுகர் கவியழகன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கவியழகன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இச்சமாதானச் சூழ்நிலையிலும் அதற்கு முன்னும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் உறவில் விரிசலை ஏற்படுத்தப் பல தீயசக்திகள் முயன்றுள்ளன. முயன்றும் வருகின்றன.

அவர்கள் மக்களுக்கு உதவியளிப்பது, பங்காளியாவது, பங்களிப்பது போன்ற பாணியில் தமது திட்டத்தையும் நோக்கத்தையும் படிப்படியாக நடைமுறைப்படுத்த முயல்கின்றமை யாவரும் அறிந்ததே.

இச் செயற்பாடுகள் வரலாறு காணாத இடம்பெயர்வின் பின் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மக்கள் மீளக் குடியேறியதைத் தொடர்ந்து படிப்பாடியாக வளர்ச்சியடையத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

இச்சதி முயற்சிகள் வெற்றியளிக்கப் போவதுமில்லை, நீண்டகாலம் நிலைக்கப்போவதுமில்லை எனவே இவ்விடயத்தில் நாம் நிதானமாகவும் அவதானமாகவும் செயற்பட வேண்டும்.

சமாதான காலத்தில் நாம் பலவீனர்களாக இருக்க முடியாது. மாறாகப் பலம் குன்றாது இருக்க வேண்டும். அப்போதே சமாதானம் செயல் வடிவம் பெறுவதற்கான வாய்ப்பு உண்டாகி சமாதானத்தின் பலம் அதிகரிக்கும். எனவே தான் காட்டமான சில நடவடிக்கைகள் எமது தரப்பால் தேவைக்கேற்ற வகையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது எம்மால் அறவிடப்பட்டு வரும் வரிகூட கட்டம் கட்டமாக நீக்கப்பட்டு வருகின்றது. ஆனால் முற்றாக உடனடியாக நீக்காவிடினும் காலப் போக்கில் இது பற்றிப் பரிசீலிக்கப்படும். எனவே இவ்விடயத்தில் மக்கள் குழப்பமடையாதிருக்க வேண்டும்.

எமது போரியல் வரலாறு இலங்கை அரசிடமிருந்து புதிதாக எதையும் தருமாறு அழுத்தம் கொடுக்கவில்லை. தமிழனின் இழந்த உரிமைகள் பறித்த நிலங்கள் மற்றும் எமது பூர்வீக சொத்துக்கள் பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றையே கேட்கிறோம். ஆகவே எமது போராட்டம்ஒட்டுமொத்தமாக ஒரு தர்மயுத்தமாகவே அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். (உ-79)



பெயாறிஸ் நிறுவன அனுசரணையுடன் புனரமைக்கப்பட்ட யாழ். வைத்தியசாலையின் சிறுவர் விடுதியை யுனிலீவர் நிறுவன தலைவர் அசான்மாலிக் நாடா வெட்டித் திறந்து வைக்கிறார்.

# பிரபாவின் பதிலைப் பொறுத்தே அகாஷியின் வன்னி விஜயம்

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதர் யசூசி அகாஷியை சந்திப்பதற்கான திகதியை இன்னமும் அறிவிக்காததால் அவரது இலங்கை விஜயம் இன்னும் முடிவாகவில்லை என்று ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் தன்னைச் சந்திப்பதற்கான திகதியை அறிவித்த பின்னரே அகாஷியின் இலங்கை விஜயம் முடிவாகும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அரசையும் விடுதலைப் புலிகளையும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தும் முயற்சியில் ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஸி அகாஷி ஈடுபட்டுள்ளதாகவும்,

இதன் அடிப்படையில் அகாஷி விரைவில் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் விரிவாகப் பேச விருப்பதுடன் அரசாங்கத் தரப்பினருடனும் இது குறித்துக கலந்துரையாடவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க டோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை இந்தியா மாற்றியமைக்க வேண்டுமெனவும் அகாஷி அந்த நாட்டைக் கோரியுள்ளமை இலங்கையின் சமாதான முயற்சியில் அவர் எந்தளவு பற்றுறுதியுடன் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)



## புலனாய்வு உறுப்பினர் கொலை

## உடன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை தெகிவளையில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் லயண்ஸ் கோர்பரல் லிங்கசாமி தேவராசாவின் கொலைச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து இராணுவப் புலனாய்வு உறுப்பினர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்காளக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டு வருவதை அடுத்து, எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாது இருப்பதற்கு சகல வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (உ-8)




பெயாறிஸ் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வைத்திய சோதனை உபகரணங்கள்.

### வருடாந்த விளையாட்டு விழா

(சுண்டிக்குளி)

யாழ். தபாலக விளையாட்டுக் கழகத்தில் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிறன்று கொய்யாத் தோட்ட சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் தபாலக விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ரி.தர்மராஜா தலைமையில் நடைபெற்றது.


20 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் புளுடைமன் அணி அதனை எதிர்த்தாடிய றெட்ஸ்ரார் அணியை 2 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெட்ஸ்ரார் அணி 18 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

புளுடைமன் அணி அதன் துடுப்பாட்டத்தில் 16.1 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஏ.பாலேந்திரா, எஸ்.சுரேஷ் மோகன் ஆகியோர் கடமையாற்றினர்.

உதைபந்தாட்டப் போட்டியில் றெட் ஸ்ரார் அணி புளுடைமன் அணியை எதிர்த்து ஆடியது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் எதையும் போடாததினால் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக மேலதிக உதைகள் கொடுக்கப்பட்ட போது,1:0 என்ற கோல் கணக்கில் றெட் ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஏ.சி. அரவிந்தன், எஸ்.சுரேஷ், ஏ.பாலேந்திரா ஆகியோர் கடமையாற்றினர்.இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தபாலதிபர் கெ. தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம், கே.சச்சிதானந்தசிவம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ-110)




வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகனிடம் வைத்திய பரிசோதனை கருவிகள் கையளிக்கப்படுகின்றன.

# வாக்குப் பெட்டிகளைக் குண்டர்கள் இருவர் அபகரித்துச் சென்றனர்

## உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியம்

(கொழும்பு)


எனது உதவியாளரான சார்ஜன்ட் உபாலியின் கழுத்தில் துப்பாக்கியை வைத்து ஆயுதத்தை கீழே போடும் படி கூறிவிட்டு குண்டர்கள் இருவர் வாக்குப் பெட்டிகளை அபகரித்துக் கொண்டு சென்றார்கள். இவ்வாறு உடத்தலவின்ன படுகொலைகள் விசாரணையின் போது சாட்சியமளித்த பொலிஸ் கன்ஸ்டபிள் வசந்த குணரட்ன தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் கஸநாயக்க, தீபளி விஜேசுந்தர, சுனில் ராஜபக்ஸ், ஆகியோர் முன் நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் சாட்சி தொடர்ந்து கூறியதாவது,

முதல் தடவையாக தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்காக கண்டி, உடத்தலவின்ன ஜம்மு அஸ்வர் வித்தியாலயத்திற்கு சென்றிருந்தேன். எனக்கு உதவியாளராக சார்ஜன்ட் உபாலி நியமிக்கப்பட்டிருந்தார்.

தேர்தல் தினமான 5 ஆம் திகதி காலை 6.30 மணிக்கே வாக்குச் சாவடிக்கு மக்கள் வந்து விட்டார்கள். பி.ப 3 மணி வரை வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. தொடர்ந்து வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கியது. மக்கள் சிங்களத்திலும் தமிழிலும் சத்தமிட்டவாறு ஓடத் தொடங்கினர்.

வாக்களிப்பு நிலையத்திற்கு கொமாண்டோக்களும், சீருடை அணிந்தவர்களும் கூக்குரலிட்டபடி வந்தனர். சிவில் உடையில் இருந்த இருவர் வாக்கு சாவடிக்குள் வந்து வாக்குப் பெட்டிகளை எடுத்துச் சென்றனர். லைசென்ஸ் பெற்ற சண்டியர்கள் என தம்மை அழைத்துக் கொண்டனர் என்று சாட்சி தெரிவித்துள்ளார். (உ)



விடுதியில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு சிற்றுண்டிப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.

# இன்று ஒரு தகவல்

## மன நிறைவு முக்கியம்

ஒரு ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்கவேண்டும் என்பது அவருடைய ஆசை. தானே அதற்குமுன்மாதிரியாக இருக்கவேண்டும் என்று நினைத்தார். அரண்மனையைச் சுற்றி நிறைய மரங்களை நட்டு வளர்த்தார். இதைப் பார்த்து விட்டு ஜனங்களும் அவரவர் வீட்டைச் சுற்றி மரக் கன்றுகளை நட்டு வளர்த்தார்கள். கொஞ்சக் காலத்தில் ஊர் முழுவதும் பசுமையாக மாறி விட்டது. எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது. இது ஒரு பக்கம் இருக்க,நான் இப்போது சொல்லப்போகின்ற கதை வேறுயூ

அதாவது அந்த ராஜா ஒரு நாள் தன்னுடைய அரண் மனையைச்சுற்றியிருக்கிற விதவிதமான மரங்களை எல்லாம் போய்ப்பார்த்தார். 'எப்படி இருக்கிறீர்கள்? ' என்று ஒவ்வொரு மரத்திடமும் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாக இருப்பதாக தெரியவில்லை. அதற்கும் மனதில் குறையூ முதலில் ஆலமரத் திடம்போனார்'மன்னாயூ நான் நன்றாக பெரிதாக வளர்ந்திருக் கிறேன். அடர்த்தியாக இருக்கிறேன், கிளைகள் எல்லாம் நான்கு பக்கமும் நன்றாகப்படர்ந்து தான் இருக்கின்றன. இருந்தாலும என்ன பிரயோஜனம். என்னுடைய பழம் மிகவும் சிறிதாக இருக்கிறதே.என் கண்ணுக்கே சரியாகப்புலப்படமாட்டேன் என்கிறதேயூ நான் இருக்கின்ற அளவுக்கு என்கிளையில் இருக்கின்ற பழம் எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும். அது இத்தனை சிறிதாக இருப்பது எனக்குப்பெரிய அவமானமாக இருக்கிறது. இப்படி இங்கு நின்று கொண்டிருப்பதே மிகவும் கூச்சமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாம் என்று பார்க்கிறேன் என்று அது சொல்லியது.

சரியூ இருக்கட்டும் என்று நினைத்துக்கொண்டு ராஜா அடுத்த படியாக ஒரு அத்தி மரத்திடம் போனார் .அதுவும் புலம்பஆரம்பித்து விட்டது.'நான் கூட பெரியமரம் தான். இலை அழகாக இருக்கிறது. பழம் அழகாக இருக்கிறது இருந்தாலும் உள்ளே விசயம் இல்லையே'அத்திப்பழத்தைப் பிட்டுப் பார்த்தால் ,அத்தனையும் சொத்தை' என்று பழமொழியே உண்டாகிவிட்டது. இப்படி ஒரு கெட்ட பெயரோடு நான் இருக்கவேண்டுமா? ' என்றது. 'சரியூ இதுவும் இருக்கட்டும்' என்று செல்லிவிட்டு,அடுத்ததாக வேப்பமரத்திடம் போனார். அது தன்னுடைய வேதனையைவெளியிட்டது.' எனக்கு எவ்வளவே மருத்துவ குணங்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.இருந்தாலும் என்ன பிரயோசனம்? என்னுடைய பழத்தை மனிதர்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே ' என்றது.

பின்னர் ராஜா பக்கத்திலிருந்த பனை மரத்திடம்போனார். நான் நல்ல உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். மற்ற மரங்களெல்லாம் என்னை அண்ணார்ந்து தான் பார்க்கவேண்டும். இருந்தாலும் என்னிடம் நிழலுக்காக யாரும் வந்து ஒதுங்குவதில்லையே என்றது. என்ன இது. எல்லா மரங்களும் இப்படி திருப்தியில்லாமல் இருந்து கொண்டிருக்கின்றவே என்று நினைத்துக்கொண்டே அங்கே இருந்த பைன் மரத்திடம் ராஜா போனார். அழகாக ,உயரமாக, பசுமையாகத் தான் இருந்தது.ஆனால் பழமோ-பு'வோ கிடையாது அதை நினைத்து அது வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது.

ஓக் மரம்ஒன்று நின்று கொண்டிருந்தது. அது இலையுதிர் காலத்தில் என்மேல் இருக்கிற எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. 'முடி கொட்டிய மனிதர்கள் மாதிரி நான் மொட்டையாக நிற்கவேண்டி இருக்கிறது. என்ன வாழ்க்கை இது ' என்று சொல்லிஅலுத்துக் கொண்டது. சரியூ புளியமரம் என்ன சொல்கிறது பார்ப்போம என்று அதனிடம்போனார். ' என்னுடைய நிழலில் யாரும் தங்க மாட்டார்கள். உடம்புக்கு சூடு என்று ஒதுங்கிப்போய் விடுவார்கள். அடி மரத்தைப் பார்த்தீர்கள் என்றால் பட்டை யெல்லாம் உரித்துப் பார்ப்பதற்கே கேவலமாகஇருப்பேன் 'என்றது அது.

முருங்கை மரம் என்ன சொல்லியது தெரியுமா?'என்னுடைய இலை காய்யெல்லாம் சாப்பிடுகிறவர்களுக்கு சத்துக் கொடுப்பது வாஸ்தவம்.ஆனால் என் உடம்பிலே சத்தே கிடையாது.கொஞ்சம் வேகமாக காற்றடித்தால் முறிந்து விழுநது விடுகிறேன். என்ன வாழ்க்கை இது ?'அப்படிச் சொல்ல' வருத்தப்பட்டது.

ராஜா யோசித்தார். என்ன இது ?மரங்கள் பு'மியின் வரங்கள் என்று சொல்கிறோம்.மழை பெய்வதற்கே அவை தான் காரணம்.பு'மி செழிப்பாக இருப்பதற்கு அவை தான் காரணம். வீடு கட்ட நாற்காலி செய்ய உபயோகிப்பது மரம். மனிதனுக்கு வேண்டிய ஆதாரங் களையும்கொடுக்கின்றன மரங்கள். அப்படியெல்லாம் இருந்தும் எல்லா மரங்களும் நிம்மதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின் றனவே என்று நினைத்தார்.

அப்போது அங்கே இருந்த ஒரு மகிழ மரம் அவர் கண்ணிலே பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக மகிழ்ச்சியாக இருப்பது மாதிரித் தெரிந்தது.உடனே ராஜா அதனிடம் போனார். ' உனக்கு மனதிலே ஏதும் குறை இல்லையா?' என்று கேட்டார். ' இல்லை ... நான் சந்தோசமாகத்தான் இருக்கிறேன்' என்றது மகிழமரம். அப்படியா ?என்று ஆச்சரியமாகக் கேட்டார் ராஜா. ஆமாம் மன்னா? இந்த இடத்திலே நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ,வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் நடுவ தற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே அதுவே எனக்குப் பெருமை. அதுவே எனக்குத்திருப்தியூ என்றது மகிழமரம்.

மகிழ மரம் சாதாரணமாகத்தான் இருக்கும்.இளம் மஞ்சள் நிறத்தில் பு'க்கள் .அது காய்ந்து மணம் வீசும்.மகிழ மரம் மாதிரி மனத் திருப்தியோடு வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இந்த உலகத்தில் ஒரு நாயாகவோ , நரியாகவோ கூடப் பிறந்திருக் கலாம். மனிதனாகப்பிறந்திருக்கிறோம். அதுவே பெருமையில்லையா? இந்த நிறைவு தான் மகிழ்ச்சியின் இரகசியம்.

ஒரு பையன் அப்பாவிடம் போய்,' அப்பா நீங்கள் இந்த உலகத் தில ஒரு மனிதனாகப் பிறந்தது என்னுடைய அதிர்ஷ்டம' என்றான். ஏனடா அப்படிச் சொல்கிறாய்? என்றார் அப்பா. நீங்கள் ஒரு கரடியாகப்பிறந்திருந்தால் இந் நேரம் நானும் ஒரு கரடிக்குட்டியாகத் தானே இருந்திருப்பேன். என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பாராளுமன்றத்தில் எதிர்ப்பியக்கம்

# எதிரணிக்கட்சிகள் ஆலோசனை

(கொழும்பு)

எதிர் வரும் 6ஆம் திகதி பாராளு மன்றம் கூடும்போது,அங்கு எதிர்ப் பியக்கம் ஒன்றினை நடத்துவது குறித்து எதிர்க்கட்சிகள் ஆலோசனை செய்து வருகின்றன.

சமாதான பேச்சு வார்த்தையில் இருந்து விடுதலைப்புலிகள் இடை விலகி இருப்பது குறித்தும் அதனால் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலைமை பற்றி ஆராயவும் பாராளு மன்றத்தை உடனே கூட்டுமாறு எதிர் கட்சிகள் கடந்த வாரம் சபாநாய கரை கோரியிருந்த போது இது விடயத்தில் பிரதமரே முடிவெடுக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

தமது இந்த கோரிக்கை நிராகரிக் கப்பட்டதைக் கண்டித்தே எதிர்க்கட்சி கள் எதிர்ப்பியக்கம் நடத்தவுள்ளன.

அதேவேளைஅன்றைய தினம் தற்போதைய பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலை குறித்து விவாதம் ஒன்றை நடத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுது தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டு வருகின் றது. (உ)

### பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்கும்

# மாபெரும் கூட்டு மேதினக் கூட்டம்

# நாளை மத்திய கல்லூரி மைதானத்தில்

(தென்மராட்சி)

சர்வதேச தொழிலாளர் தின மாகிய நாளை யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலா ளர்கள் பங்குகொள்ளும் மாபெரும் கூட்டு மேதினம் மிகவும் எழுச்சி யுடன் கொண்டாடப்படவுள்ளது.

இம்மாபெரும் கூட்டு மேதினத் தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பிஆர்.எல் எவ். (சுரேஸ் அணி) புதிய ஜனநாயகக்கட்சி, ஐக்கிய சோஷலிசக்கட்சி,ரெலோ ஆகிய அரசியல் கட்சிகளும் பல்வேறு வகைப்பட்டதொழிற்சங்கங்களும் நூற்றுக் கணக்கான பொது அமைப் புக்களும் பங்கேற்கவுள்ளனர்.

நாளை பி.ப.2 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகவுள்ள இம்மாபெரும் பேரணியில் யாழ் .குடாநாட்டில் பலபாகங்களிலிருந்தும் மீனவர் கள்,விவசாயிகள், கூட்டுறவாளர் கள்,சீவல் தொழிலாளர்கள், ஆசிரி யர்கள் மற்றும் பொது வேலையா ளர்கள் பங்கு கொள்கின்றனர்.

இப்பேரணியில் நூற்றுக் கணக் கான ஊர்திகள் இடம் பெறுகின்றன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தி லிருந்து புறப்படும் மாபெரும் பேரணி பருத்தித்துறை வீதிவழியாகச சென்று ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு வீதியூடாக யாழ் மத்திய கல்லூரி மைதானத்தை பி.ப.5 மணிக்கு அடையும்.

அங்கு கூட்டு மேதின ஏற்பாட்டாளர் குழுவின் தலைவர் க.சிவராசா தலைமையில் மேதினக்கூட்டம் இடம்பெறும்.இதில்தமிழீழ விடு தலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி. இளம் பரிதி கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனா திராசா,அ.விநாயகமூர்த்திஉட்பட வேறும் பலர் உரைநிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை நாளை மு.ப.10 மணிக்கு புதிய ஜனநாயகக்கட்சியின் மாபெரும் புரட்சிகர மேதினக்கூட்டம் யாழ்.பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கேட்போர்கூடத்தில் தோழர் கா.கதிர காமநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய ஜன நாயகக்கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. வி .செந்திவேல்,தோழர் கோ. தேவராஜா உட்பட வேறும் பலர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட கிளையும் மேதினத்தினை தமது செயலகத் தில் கொண்டாடவுள்ளது எனத் தெரியவருகின்றது. (உ-77)

## இராசி பலன் 30.04.2003

(சித்திரை 17,புதன்)

| | |
|---|---|
| சதுர்த்தசி | பி.ப.4.16 வரை |
| ரேவதி | மு.ப.8.40 வரை |
| இராகுகாலம் | 11.58-1.28 |
| சுபநேரம் | 4.28-5.58 |

**மேடம்**
வெகுமானம் கிடைத்தல்,கௌரவமான நிலை, நல்ல படுக்கை,முயற்சி கைகூடும்.

**இடபம்**
உணர்ச்சி வசப்படல்,அதிக செலவு, சோம்பல்,எடுத்தகாரியம் தாமதம்.

**மிதுனம்**
தனதானியச் சேர்க்கை,குடும்பசுகம், நினைத்த காரியம்கைகூடும், ஆனந்தம்.

**கடகம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், நன் கொடை, எடுத்தகாரியம் கைகூடும், ஆரோக்கியம்.

**சிங்கம்**
எதிர் பாராத செலவு,தேசாந்திர வாசம், புதிய முயற்சி,வேலைப்பளு.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை,அஜீரணரோகம், காரியதடங்கல்,வாகன பயம்.

**துலாம்**
தேக சௌக்கியம்,கீர்த்தி முயற்சி கைகூடும்.தொழில் இலாபம்.

**விருச்சிகம்**
காரிய அனுகூலம்,விரும்பிய பொருள் கிடைக்கும்வாய்ப்பு,குடும்பமகிழ்ச்சி,தொழில் விருத்தி.

**தனுசு**
பணக்குறைவு ,அஜீரணரோகம், குடும்பக் கவலை,கௌரவக்குறைவு.

**மகரம்**
புத்தி சஞ்சலம்,தனவிரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும்,நண்பர்கள் உதவி.

**கும்பம்**
எடுத்த காரியம் கைகூடும், செய் தொழில் விருத்தி, கூட்டு முயற்சி, நற்கீர்த்தி.

**மீனம்**
அதிக செலவு,விவாதம், காரிய தாமதம்,செல்வாக்குக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## உலமாக்கள் குழு ; யாழுக்கு சமாதான நல்லெண்ண விஜயம்

(யாழ்ப்பாணம்)

காத்தான் குடி பிரதேச உலமாக்கள் 30 பேர் கொண்ட குழு, இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இச்சமாதான நல்லெண்ண விஜ யத்துக்கான ஏற்பாட்டினை காத் தான் குடி ஜம் இய்யதுல் உலமா மேற்கொண்டுள்ளார்.

இக்குழுவினர் கண்காணிப் புக்குழு,விடுதலைப்புலிகளின் முக்கியஸ் தர்கள் வடக்கு கிழக்கு முஸ்லிம் அகதிகள் அமைப்பு,யாழ். பல் கலைக்கழக புத்தி ஜீவிகள் மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்தித்து சமா தானத்தின் அவசியம் குறித்த வலியுறுத்தல்களை வழங்கவுள்ளனர்.

தவிரவும் எதிர் வரும் மே மாதம 2ஆம் திகதி ,கே.கே.எஸ். வீதியில் உள்ள முகைதீன் ஜும் ஆப்பள் ளிவாசலில் குத்பாப் பிரசங்கத்தை யும்,ஜும்ஆப் தொழுகையையும் நடத் தவுள்ளனர். (உ)

# தேசிய மொத்த உற்பத்தி 2 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசு புலிகளினால் கைச்சாத்திடப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இலங்கையின் தேசிய மொத்த உற்பத்தி கடந்த ஆண்டை விட இரண்டு சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன் ,இவ்வருடம் அது 5 சதவீதமாக வளர்ச்சி பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் டோக்கி யோவில் வெளியிடப்பட்ட '2003 ஆம் ஆண்டின் ஆசிய அபிவிருத்தி கண்ணோட்டம்' என்ற அறிக்கை யில் இது விடயம் குறிப்பிடப்பட்டுளளது.

ஆசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அபிவிருத்திகள் தொடர்பாக இவ் அறிக்கை தயாரிக் கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் படி இலங் கையின் பொருளாதார நிலைமைகள குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப்பிரதிநிதி ஜோன் கூனி கருத்து தெரிவிக்கையில்,

எண்ணெயின் விலை, வளை குடா நாடுகளில் இலங்கைத் தொழிலா ளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் என்பவற்றின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதார மாற்றங்களை கண்டறியமுடியும் எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

### குடா நாட்டில் உள்ள

# நகர சபைகளின் எண்ணிக்கை ஆறாக உயர்வடையும்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் செற்படு கின்ற உள்ளூராட்சி மன்றங்களில் 3 பிரதேச சபைகள் விரைவில் நகர சபைகளாகத்தரம் உயர்த்தப்படவுள் ளதாக வடக்கு கிழக்கு மாகாண உளளூராட்சி ஆணையாளர் செல்வி து. விஜயலட்சுமி கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வலி-தென் மேற்கு பிரதேச சபை மற்றும் வலி- கிழக்கு பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை என்பனவே நகர சபைகளாக தரம் உயர்த்தப்படவுள்ளன.

மேலும்,இவ் உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது சனத் தொகை கூடி இருப்பதால் மக்களிற்கு தேவையான சேவைகளை உரிய விதத்தில் வழங்கும் வகையில் ஆளணி அதிகரிக்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ,சபைகளில் உள்ள அங்கத்தவர்களால் பிரேரிக்கப் பட்ட பிரேரணைகள்,கடந்த காலங் களில் செய்த வேலைத்திட்டங்கள், புதிய நகர சபையின் உத்தேச வரை படம்,செலவு விபரங்கள், கடந்த கால அபிவிருத்திப்பணிகள் போன்ற விடயங்கள் அடங்கிய அறிக்கையை வடக்கு கிழக்கு மாகாண உள ளூராட்சி உதவி ஆணையாளருக்கு உடனே அனுப்பிவைக்கும்படியும் மேற்படி கடிதத்தில் கோரப்பட்டுள் ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது பருத்தித்துறை,வல்வெட்டித்துறை, சாவகச்சேரி போன்றவை நகர சபைகளாக செயற்பட்டுவருகின் றமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.
-குறள்-

வலம்புரி

## முன்மாதிரியான பெரும் பணி

யுத்தத்தின் விளைவாக யாழ்.குடாநாடு தன்னிலையில் இருந்து ஐம்பது வருடங்கள் பின்நோக்கிச் சென்றுள்ளது.இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம் தமிழர்களின் தாயகமான வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திலேயே தனது முழு அனர்த்தத்தையும் ஏற்படுத்தி இருந்தது.இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பெரும் அவலங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.அதிலும் குறிப்பாக, யாழ்.குடாநாட்டு மக்கள் அனுபவித்த துன்பங்கள்,துயரங்கள்,மரணங்கள் ஏராளம், கல்வியில் மிக உன்னத நிலையில் இருந்த யாழ்ப்பாண மாணவர்கள் போதிய கல்வி வசதிகள் இன்மை, பௌதீக வளங்களின் பற்றாக்குறை அகவய,புறவயச் சூழல்களின் பாதக நிலைகள் போன்றவற்றால் கல்வியில் பெரும் பின்னடைவு கண்டனர்.உலகம் முழுவதும் விஞ்ஞானத் தொழில் நுட்பங்களையும்,தகவல் தொழில் நுட்பங்களையும் அனுபவித்து அறிவியல் துறையில் அதீத வளர்ச்சி கண்டுள்ள போது, யாழ்ப்பாண மாணவர்கள் குப்பி விளக்கில் கல்வி கற்ற நிலை மிகவும் வேதனைக்குரியது.

இத்தகைய தாக்கங்களால் யாழ்ப்பாணத்து மாணவர்கள் தென்னிலங்கை மாணவர்களோடு ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காண முடியும்.இவை கல்வியின் சார்பில் ஏற்பட்ட இழப்பாகும். மாறாக மருத்துவ வசதிகளைப் பொறுத்த வரை யாழ்.போதனா வைத்திய சாலை மிகப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.குறிப்பாக நோய்வாய்ப்படும் சிறுவர்களைப் பராமாப்பதில் பெரும் கஷ்டங்கள் எதிர் நோக்கப்படுகின்றது.

இந்நிலையில் கொழும்பில் இயங்கும் யுனிலிவர்ஸ் நிறுவனம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சிறுவர் விடுதியை 18இலட்ச ரூபா செலவில் புனரமைத்திருப்பதுடன சிகிச்சைக்கான கருவிகளையும் அன்பளிப்புச் செய்துள்ளதெனில்,அப்பெரும் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.தென்னிலங்கையில் இயங்கும் நிறுவனம் ஒன்று முதன் முதலாக 18 இலட்சம் ரூபாவை யாழ்ப்பாண மக்களின் பயன்பாட்டிற்காகச் செலவிட்டுள்ளதெனில்,அந் நிறுவனத்தின் பணி காலத்தால் செய்த பேருதவியாகும்.

சிறுவர் விடுதியை புனரமைப்பதில் யுனிலிவர்ஸ் நிறுவனத்தின் தலைவர் சொன் மாலக்,பணிப்பாளர் அமல்லப்பிறால் ,முகாமையாளர் வித்தியா சிவராஜா ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலை மீது காட்டிய கரிசனையும் ஆர்வமும் ஏனைய நிறுவனங்களுக்கும் முன்மாதிரியாக அமையும் என்பது திண்ணம்.

# மக்களின் ஆதரவு உள்ளவரை தமிழீழத்தை அடைவது உறுதி

## மகளிர் படைத் தளபதி கேணல் துர்க்கா

(யாழ்ப்பாணம்)

மனிதராகப் பிறந்த நாம் என்றோ ஒருநாள் இறப்பது உண்மை. அதற்காக நாம் பிறந்தோம், வாழ்ந்தோம் இறந்தோம் என்ற நிலையில் வாழக்கூடாது. எமது காலத்தில் எமது மக்களின் வாழ்விற்கும், வளத்திற்கும ஏதையாவது செய்யவேண்டும்.

அந்தவகையில் எமது மண்ணை மீட்டு எமது இனத்தின் வரலாற்றை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். இது எமது கடமை மட்டுமல்ல உரிமையும் கூட. எமது மண்ணை மீட்கவும் மக்களை அடிமை விலங்கில் இருந்து விடுவிக்கவும் எமது போராளிகள் தமது உயிரைத் தியாகஞ் செய்தனர்.

இனியும் எமது மக்களுக்காக நாம் எதைச் செய்ய வேண்டுமானாலும் செய்வோம். அவர்களின் விருப்பத்திற்கமையவே சமாதானத்திற்கு வந்துள்ளோம்.

இதுவே எமது தேசியத் தலைவர். பிரபாகரனின் இலட்சியமாகும். தமிழ்மக்கள் வீரம் செறிந்தவர்கள். அவர்களுடைய அன்பும் ஆதரவும் இருக்கும் வரை எமது போராட்டம் தோல்வியடையாது என்ற நம்பிக்கையுடனே நாம் போராட்டத்தை ஆரம்பித்தோம். வெற்றி பெற்றோம்.

இந்த ஆதரவும், அன்பும் எமக்கு தொடர்ந்து இருக்கும் வரை நாம் தமிழீழத்தை அடைந்தே தீருவோம்.

அத்துடன், நல்வழி காட்டலுடன் கூடிய தலைமை எம்மிடம் உள்ளது. தாய்க்குலத்தை நல்வழிப்படுத்தக் கூடிய நல்ல தலைமை தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. எனவே திறந்து விட்ட பெரும் பாதையூடாக நாம் தமிழீழத்தை அடைந்தே தீருவோம். இதில் நாம் மிகுந்த உறுதியாக இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

**புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான்**

ஒரு தசாப்த காலத்திற்கு முன்னதாக முழுமையாக வெற்றி கொள்ள முடியாதிருந்த ஆனையிறவுப் படைத்தளத்தை நாம் தகர்த்து வெற்றி கொண்டிருக்கிறோம். இதன் மூலம் வலுமிக்க சக்தியாக புலிகள் இருக்க என்ன காரணம் என்ற உண்மை நிலையை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

எமது தலைவரின் சிறந்த நேரடி வழிகாட்டலின் பேரிலேயே ஆனையிறவு பகுதியில் சுமார் 80 சதுர கிலோமீற்றர் பரப்பில் சுமார் 40 ஆயிரம் படையினருடன் இருந்த பெருதளத்தை வெற்றிகரமாக கைப்பற்றியுள்ளோம்.

அத்துடன் இந்த வெற்றிக்கு எமது மக்களும் ஒருகாரணமாக இருந்துள்ளார்கள். அதை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். எமக்கு உதவியாக எமது மக்கள் எல்லைப் படையாக வந்து தோளோடுதோள் நின்று போராடியிருக்கிறார்கள்.

நாம் இவ்வளவு விரைவில் வலுப்பெற்றதற்கு முக்கிய காரணம் எமது மக்களும் தலைவரின் மதிநுட்பமும் என்பதை அரசு மட்டுமல்ல சர்வதேசமே அறியும்.

*நேற்று முன்தினம் பளையில் இடம்பெற்ற, ஆனையிறவுப் பெரும் படைத்தளம் தகர்த்தழிக்கப்பட்ட மூன்றாம் ஆண்டினதும், தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்பின் இரண்டாம் ஆண்டினதும் வெற்றிப் பெருவிழாவில் கலந்து கொண்டு, விடுதலைப்புலிகளின் தளபதிகள் நிகழ்த்திய உணர்ச்சிமிகு உரைகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.*

போராட்டத்தினால் நாம் பல வெற்றிகளை குவித்தபோதும் போரை நிறுத்திப் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வெற்றியுடன் நகர்ந்து செல்வதற்கும் நாம் பின்னிற்கவில்லை.

**அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்**

போராட்டத்தினை நிறுத்தியுள்ள நாம், சமாதானப் பேச்சுவார்த்தையொன்றில் இணைந்து அதன் மூலம் ஒரு தீர்வைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதை சர்வதேசமே உற்று நோக்கி வருகின்றது.

நாங்கள் எல்லோரும் ஒவ்வொரு நடவடிக்கைகள் மூலம் இந்தத் தேசத்திற்கு எவ்வளவு பெருமையையும், வெற்றியையும் சேர்த்தோமோ அதேபோன்று இன்றைய சமாதான காலப்பகுதியிலும் எமது பலத்தை நிர்ணயிக்கின்ற பெரும் சக்திகளாக நாம் எல்லோரும் செயற்பட வேண்டும் என்பதை நாங்கள் தற்போது அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

சிறுபான்மையினர் எனக் கூறி ஶ்ரீலங்கா அரசு தற்போது எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. சமஷ்டி தருவதாக கூறியிருக்கிறது.

இந்தப் பெருமை எமது போராட்டத்திற்குப் பக்கபலமாக இருந்து எம்மை உற்சாகப்படுத்திய மக்களையே சாரும்.

சுதந்திரத்திற்காக நாம் போராடும்போது எமது பலத்திற்கு வலுச்சேர்த்த மக்கள் இன்றைய சமாதான சூழலிலும் எம்முடன் சேர்ந்து பலமான ஒரு சக்தியாகச் செயற்பட வேண்டும். எமது பலமான இந்தச் சக்தியை சர்வதேச நாடுகள் கண்டு வியந்து போக வேண்டும். எங்கள் பலம் உலகெங்கும் பிரகாசிக்க வேண்டும். எங்களது ஒருமித்த குரல் உலகமெங்கும் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இந்த வெற்றி விழாவில் கூடியுள்ள அத்தனை மாவட்ட மக்களும் எமது பலத்தை வெளிப்படுத்துகின்ற எந்தச் சந்தர்ப்பத்திலும் பின் நிற்காது எமக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

(உ-10)

### இராணுவப் புலனாய்வு உறுப்பினர்களின்

# கொலைகளைத் தடுக்க எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை

### ஒஸ்ரின் பெர்ணாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

ஶ்ரீலங்கா படையில உளவாளிகளாக செயற்படும் தமிழர்கள் கொல்லப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ளமையையடுத்து அது பற்றி ஆராய்வதற்கான குழுவொன்றை தனது தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைத்துள்ளதாகவும் அதற்கான உடனடி நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு வசதியாக இன்னும் ஒரு வாரத்திற்குள் அறிக்கையொன்றினை தாம சமர்பிக்கவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துவெளியிடுகையில்: இலங்கைப் படைப்பிரிவில் உளவாளிகளாக பணியாற்றும் தமிழர்கள் கொல்லப்படும் சம்பவங்களையடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க பெரிதும் முயன்று கொண்டு வருகிறோம்.

ஆனால், அது முழுமையாக வெற்றி பெறவில்லை என்றே தோன்றுகிறது. எனவே இந்த விடயத்தை மீண்டும் பரிசீலனை செய்து இவர்களின் நலன்களை எவ்வாறு நம்மால் முடிந்த அளவிற்கு பாதுகாக்க முடியும் என்பதை ஆராய்ந்து வருகின்றோம். இதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் எம்மை சில நடவடிக்கைகள் எடுக்கும்படி பணித்திருந்தார். அதற்கமைய நாம் எடுத்த நடவடிக்கைகள் சில தோல்வியில் முடிந்தன.

எனவேதான் இந் நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யுமாறும், இவை ஏன் தோல்வி அடைந்தன என்பதை ஆராய்ந்தும் இதனை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுகளை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்கும்படி பிரதமர் எம்மைப் பணிததிருந்தார் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமரால் அமைக்கப்பட்ட மேற்படி குழுவுககு ஒஸ்ரின் பெர்னாண்டோவே தலைமை வகிப்பதும் குறிப்பிடத் தக்கது.

(உ-10)

ௐ

### தினசரி தியானம்

## தைரியமாயிருங்கள்

ஆன்மீகத் தொண்டர் எப்போதும் உதவியற்றவர் அல்லர்,உலகில் உள்ள அனைத்தும் அவரது அயராத போராட்டத்திற்குத் துணை செய்து கொண்டிருககின்றன. ஏனெனில்,அவர் எலோருக்கும் தேவையான உண்மையான ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறார்.ஒருவர் ஏதாவது ஒரு பொருளை வெறுக்கலாம். ஆனால்,உண்மை யாராலும் வெறுக்கப்படாததாகும். பதினான்கு உலகங்களும் இத் தொண்டருக்கு எதிராகப் போரிட வரினும்,தொண்டர் இவற்றைப் புல்லாகத் தான் மதிப்பார்.

**சுவாமி சிவானந்தர்**

### அதிரடிப்படையின்

# அடாவடித்தனத்தைக் கண்டித்து களுவாஞ்சிக் குடியில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கடந்த ஞாயிறன்று பொது மக்கள் சிலர் விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் அப்பிரதேசத்தில் பூரண கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

புதுவருடத்தை முன்னிட்டு பொலிஸ் மற்றும் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்த விளையாட்டு விழாவில் கயிறிழுத்தல் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு விசேட அதிரடிப்படை அணியும் பொதுமக்கள் அணியும் தெரிவாகின.

இச்சுற்றில் பொதுமக்கள் அணி வெற்றியீட்டியதையடுத்து ஆத்திரம் கொண்ட விசேட அதிரடிப் படையினர் பொதுமக்களை தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது இருவர் படுகாயமடைநது களுவாஞ சிக்குடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியெங்கும் பதற்றநிலை காணப்பட்டது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக ஒரு சில நாட்களிற்குள் உரிய நடவடிக்கை மேற கொள்வதாகவும், இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம் பெறாது எனவும் விசேட அதிரடிப் படையினர் உறுதியளித்துள்ளனர்.

(உ-5)

# யாழ். வீதிகளில் தமிழ்க் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளுக்கு விளம்பர நோக்குடன் வியாபார நிறுவனங்களினால் நாட்டப்படும் பெயர்ப்பலகைகளில் நிரம்பவே எழுத்துப்பிழைகள் காணப்படுவதாக தமிழ் அபிமானிகளால் பெரிதும் கவலை தெரிவிக்கப்படுகிறது.




குறிப்பாக முனீஸ்வரன் வீதியென்பதற்குப் பதிலாக முன்ஸ்வரன் எனவும், திருநெல்வேலி புதுவீதியென்பதற்குப். பதிலாக திருதொல்வேலி எனவும் பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள இப்பெயர்ப் பலகைகளில் ஆங்கிலம், சிங்களம் என்பவற்றில் சரியாகவே பெயர்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தமிழ் மொழிக்கு உரிய மதிப்பளித்து அதற்காக உயிரையே கொடுத்து வரும் யாழ்ப்பாண மண்ணில், எமது மொழிக்கு இந்த நிலையா? எனப் பலரும் கண்டனம் விடுத்துள்ளனர்.

(உ-4)

## முஸ்லிம்களின் மீள்குடியமர்வு புத்தளத்தில் கலந்துரையாடல்

(புத்தளம்)

வடக்குக் கிழக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசித்து வரும் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும், கண்ணிவெடிகளை அகற்றுதல் தொடர்பாகவும் புத்தளம் மாவட்ட செயலகத்தில் நேற்று உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதிநிதிகள்,யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபரின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் போது புத்தளம் மாவட்டத்தில் இதுவரை சுமார் 800 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (வ)

## அடக்கு முறைகளுக்கு எதிராக துணிந்து குரல் கொடுப்போம்

## மேதினச் செய்தியில் டக்ளஸ்

(கொழும்பு)

அடக்கு முறைகளுக்குப் பணியாது சொந்த மண்ணில் சுக வாழ்வு காண தமிழர்களாகிய நாம் துணிவோடு எழுவோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மே தினம் உலகெங்கும் வாழும் தொழிலாளர்களின் உன்னதமான தினம்.வியர்வை சிந்தி உழைக்கும் மக்கள் தத்தம் உரிமைக் கோரிக்கைகளை பிரகடனம் செய்யும் நாள்.இந்த நாளில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறிதது ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவற்றிற்கு எதிராக ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

இலங்கை அரசினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப் பட்டு வந்த இன ரீதியான புறக் கணிப்புக்கள்,மாற்றாந் தாய் மனப்பான்மையுடனான அணுகு முறைகள்,இன ரீதியான பாகுபாடுகள் காட்டும் சடட அமுலாக்கங்கள் என்பன இனப்பிரச்சினையை விஸ்வரூபம் எடுக்க வைத்தது.

இவற்றின் பின்னணியில் உழைக்கும் வர்க்கத்தை சுரண்டும் நடவடிக்கைகளின் விபரீதம் தொடர்ந்து வருகின்றது.இத்தகைய நிலைப்பாடுகளுக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுக்க மே தினத்தில் அனை வரும் அணி திரள்வோம்.இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம்,யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 3-வது சுற்றில், இன்று புதன் கிழமை சுனனாகம் கலைவாணி விளையாட்டுக்கழகமும், கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக கழகமும் விளையாடவுள்ளன. (உ-10)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளும் லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஈ.பி.டி.பி உறுப்பினரும் நீர்வேலிப் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவருமான அப்துல் சலீம்(ரவி)என்பவர் படு காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (ந)


# உடன் தேவை

கணனி பக்க அமைப்பாளர்கள்
(ஆண், பெண் இருபாலாரும்)

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


## பஸ்ஸிற்குள் சேஷ்டை விட்டவர் நையப்புடைப்பு

(கொழும்புத்துறை)

பஸ்ஸிற்குள் பெண்கள் மீது அங்க சேஷ்டை புரிந்த ஒருவர் பயணிகளால் நையப்புடைக் கப்பட்டார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.மது போதையில் இருந்த நடுத்தர வயதான ஒருவரே சன நெரிசலைச் சாதகமாக்கி இச் செயலைப் புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அண்மைக்காலமாக பஸ்ஸிற்குள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(ந-51)

## காலாண்டு பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஜனசக்தி சன சமூக நிலையத்தின் காலாண்டுப் பொதுக் கூட்டம் இன்று மாலை 6.30மணிக்கு நிலைய முன்றலில் நடை பெறவுள்ளது.இதில் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்து உயர் கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராடடும் நிகழ்வும் நடைபெறும். (ந-5)

## மேதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தொழிலாளர் ஒத்துழைப்புக குழுவின் ஏற்பாட்டில் தொழிலாளர் ஐக்கிய மே தினம் நாளை முற்பகல் 10 மணிக்கு சிற்றி ஹோலில் நடை பெறவுள்ளது. இம் மேதின நிகழ்வில் தொழிலாளர் பிரதிநிதிகள் பலர் உரையாற்றவுள்ளனர். (ந-5)

## சுகாதாரக் கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

சுண்டுக்குளி சனசமூக நிலையததில் இன்று மாலை 5.30 மணிக்கு சுகாதாரக் கருத்தரங்கும் வடியோ படக்காட்சியும் இடம் பெறவுள்ளன. (உ- 59)

---

### அனுருத்தவுக்கு...

ஏற்பாடுகளைச் செய்யும் படி பொலிஸ்மா அதிபருக்கு உத்தர விடப்பட்டது.இதற்கு அவகாசம் வழங்கும் வகையில் விசாரணைகளை சில தினங்கள் செய்யாமல் விடுவதென்றும் அடுத்த விசாரணை அடுத்த மாதம் 5-ம் திகதி நடை பெறும் என்றும் அறிவிக்கப் பட்டது. (ந)


THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலம்
விக்னேஸ்வரன் ஆச்சாரி (Dip in English)
தமிழ்
கு.மாலினி [பண்டிதர்]
(6905)

426(302)K.K.S.ROAD JAFFNA.


## புதிய மோ. சைக்கிள் பதிவுக்

## புதிய நடைமுறை அமுல்

(யாழ்ப்பாணம்)

புதிய மோட்டார் சைக்கிளை பதிவு செய்வதற்காக மே மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய நடை முறை அமுல் படுத்தப்பட வுள்ளதாக யாழ். மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித் துள்ளார்.

இப் புதிய நடை முறையின் மூலம் வாகனத்தைப் பதிவு செய்து ஒருவாரத்தினுள் மோட்டார் போக் குவரத்துத் திணைக்களத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழ்,வாகன அடையாள அட்டை,வாகன இலக்கத் தகடு என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை,வானத்தைப் பதிவு செய்யும் போது வாகனத்திற்குரிய பதிவு ஆவணங்களை மீளப் பெறும் போதும்,வாகன உரிமையாளரே நேரில் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும்,வாகனத்தைப் பதிவு செய்யும் போது மே... வாகனப் பதிவுக்கான வி... பம்(M.T.A.2)விற்பனையை உ... படுத்தும் நிறுவனக் கழுத் ந... சுங்கத் தளை நீக்க ஆ... கொள்வனவுப்பற்றுச் சீட்டு... வாகனம் கொள்வனவு... நிறுவனத்தில் பெறவேண்... வாகவுள்ள தேசிய அ... அட்டை அல்லது சாரதி ... பத்திரம் அல்லது கடவுச் ... புகைப்படப் பிரதி,முத்திரையள... பாஸ்போட் அளவுகளில் க... வெள்ளை புகைப் படம்(இ... கிராம சேவையாளரால் உ... படுத்த வேண்டும்),பதிவுக் ச... ணம் என்பனவற்றைக் கொ... வரவேண்டும் என்றும் ... பட்டுள்ளது.

---

### திருமலை...

இத் தேடுதல் வேட்டையில் இராணுவமும் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களை வீடுகளில் இருக்குமாறும், கிராமங்களை விட்டு வெளியேறக்கூடாதென்றும் ஒலிபெருக்கி மூலம் படையினரால் அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் வீடுவீடாக தேடுதல் நடத்திய போது, வீட்டுக் குடியிருப்பாளர் பெயர் விபரம் மற்றும் குடும்ப விபரங்களையும் திரட்டி உள்ளனர்.

சுமார் ஆறு மணித்தியாலம் வரை நீடித்த இத்தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு 14மாதங்கள் கடந்த நிலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சுற்றிவளைப்புச் சம்பவம் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என தெரிவிக் கப்படுகிறது.

நேற்றைய தினம் இடம்பெற்ற இச் சுற்றிவளைப்பு சம்பவமானது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

---

### முஸ்லிம்...

பில் ஆராயப்பட்ட விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.கொக்கட்டிச்சோலை,இலுப்பையடிச் சேனை,பெண்டுகள்சேனை ஆகிய இடங்களை அண்மித்த விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலும் மூன்று குழுக்கள் நேற்று அமைக்கப்பட்டன.இக் குழுக்களின் நடவடிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் 10-ந் திகதிவரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் போது ஆராய்ப்பட்ட விடயங்கள் தொடர்பாக மே மாதம் 27-ந் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,இச்சந்திப்பை அடுத்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் கருத்து வெளியிடுகையில்; அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம் பெறாவிட்டாலும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம் பெறும் என்றும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒரு குடும்பம் போல் இருப்பதால் எவரும் அஞ்சத் தேவையில்லை என்றும் தெரிவித் துள்ளார். (ம)

### நாவாந்துறையில்...

கருத்து முரண்பாடே... வேளையில் பெரும் மோ... வெடித்தது.வாள்,கத்திகள்,... லுகள் சகிதம் இரு குழுக்... மோதலில் ஈடுபட்டிருந்த... மோதலில் பலர் படுக... அடைந்தனர்.

வீடுகளுக்குள் டை... குண்டுகளும் வீசப்பட்... தெரிவிக்கப்படுகிறதுகுண்... போதும் எவரும் காய... பிக் கொண்டனர்.சம்ப... அடுத்து ஸ்தலத்திற்கு இ... மணியளவில் விரைந்த ... ஸார் ஆகாயத்தை நே... வேட்டுக்களைத் தீர்த்து ... அங்கிருந்து சென்று விட்...

இதனைத்தொடர்ந்து ... இடையே மோதல் இடம்... றதாகத் தெரிவிக்கப்படு... இதனையடுத்து சம்பவ இட... விரைந்து சென்ற விடு... புலிகளின அரசியல் து... இரு குழுக்களையும் ச... படுத்தும் முயற்சியில் ஈடுப... எனினும் நள்ளிரவுக்குப் ... ரும் அப்பகுதியில் பதற்றம் ... விய வண்ணம் இருந்தது. (ந...)

---

### பளையில்....

வீடு திரும்பிக் கொண்டிரு... பொழுதே இச் சம்பவம் இ... பெற்றது.

பிரஸ்தாப நபரின் அடைய... அட்டை இலக்கம், பெயர் முக... என்பன படையினரால் பெற்... டுள்ளது.இது விடயம் தொட... தீவக மக்கள் நலன் காப்... யாழ்ப்பாணம் கண்காணி... குழுவிடம் முறைப்பாடு செ... ளது. (த...)

---

### மிருசுவில்...

திகதி காலை பொன்னுத்... மகேஸ்வரனைச் சந்தித்... எனது மகனையும், அவ... சென்ற ஏனையவர்களை... இராணுவம் பிடித்து ... வும் தான் தப்பியோ... விட்டதாகவும் அவர் தெரிவி...

பின்னர் நான் வரணி, ... காமம இராணுவ முகாம்கள்... தேடிப்பார்த்தேன்.அம் முகாம்க... அவர்கள் இல்லை எனத் தெரி... னர்.ஆனால்26-ம் திகதி ... மகனை பருத்தித்துறை வை... சாலையில் பிணமாகக் கண்டே...

20-ம் திகதி காலை மகே... வரனைச் சந்தித்து விட்டு ... எனது வீட்டுக்குச் சென்ற போ... இராணுவத்தினர் வந்தார்கள்.அ... களிடம் எனது மகனைப் பற்றி ... ரித்தேன். இராணுவம் பிடி... மிருசுவில் முகாமில் வைத்தி... கக் கூடும் என்று கூறினார்...

பருத்தித்துறை வைத்தியசா... யில் மகனை அடையாளம் கா... பதில் தனக்கு ஒரு வித சிரமமு... இருக்கவில்லை எனவும்,சாட்... தெரிவித்தார்.விசாரணை ஒத்... வைக்கப்பட்டது. (ந...)


# இளம் ஓவியக் கலைஞர்களே!

## உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

வலம்புரி சங்கு நாதம்

தினசரியிலும் வாரமலரிலும்

உங்கள் ஓவியங்கள் இடம்பெற மகத்தான சந்தர்ப்பம். இன்றே வலம்புரி — சங்குநாதத்தின் ஓவியக் கலையகத்தில் உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். வலம்புரியில் தினசரி வெளியாகவிருக்கும் காட்டூனில் உங்கள் கற்பனைத் திறனும் இடம்பெற இன்றே உங்கள் விண்ணப்பங்களை:

"ஓவியக் கலையகம்"
வலம்புரி - சங்குநாதம்
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சமகால பிரச்சினைகளைச் சித்தரிக்கும் உங்கள் காட்டூன்களை உடனடியாக வலம்புரிக்கு அனுப்புங்கள்.


## 5-ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் -14

மாணவர் முழுப்பெயர்.......................................

பாடசாலையின் பெயர் :.......................................

வீட்டின் முகவரி:.......................................

மாணவர்களே உங்கள் விடைகளை 07.05.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி

வலம்புரி, கல்விப்பகுதி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.